ISSN: 2582-5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ பிப்ரவரி. 27, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 140 ❖ ரூ.10

சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசு மேற்கொண்ட அகழாய்வு பணிகள்

# ஆடர்

## கீழடி முதல் 2 கட்ட அகழாய்வு அறிக்கையை 9 மாதங்களில் வெளியிட மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை , பிப்.27-

கீழடி முதல் இரு கட்ட அழகாய்வு அறிக்கையை 9 மாதங்களில் வெளியிட வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையை சேர்ந்த பிரபாகர் பாண்டியன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: 'சிவகங்கை மாவட்டம் கீழடியில் 2013 முதல் 2016 வரை மத்திய அரசு சார்பில் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் அகழாய்வு பணி மேற்கொண்டார். இந்த அகழாய்வின் போது 5000-க்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த பொருட்கள் கிடைத்தன.

இந்நிலையில், திடீரென அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். பின்னர் ஸ்ரீராமன் என்பவர் கீழடி தொல்லியல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டது. அவர் தலைமையில் நடைபெற்ற 3-ம் கட்ட அகழாய்வில் குறிப்பிடும்படியான கண்டுபிடிப்புகள்



இல்லை.

முதல் 2 கட்ட கீழடி அகழாய்வு அறிக்கையை மத்திய அரசிடம் தொல்லியல் அறிஞர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ளார். இந்த அறிக்கையில் கீழடியில் நிலவிய கலாச்சாரம், விவசாயம் செய்த பயிர்கள், விலங்குகள், நகர நாகரிகத்தை நோக்கி நகர்ந்த தன்மை குறித்து விரிவாக தெரிவித்துள்ளார்.

கீழடியில் கிடைத்த பொருட்களை ரேடியோ கார்பன் எனும் பகுப்பாய்வு முறையில் ஆய்வு செய்ததில் அந்த பொருட்கள் கிட்டத்தட்ட 2600 ஆண்டுகளுக்கு முந்தையது எனத் தெரியவந்துள்ளது.

கீழடியில் தற்போது 4 முதல் 9ம் கட்ட அகழாய்வு பணிகளை மாநில அரசு மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. ஆனால் மத்திய அரசு மேற்கொண்ட முதல் 2 கட்ட அகழாய்வு பணிகள் குறித்த அறிக்கையை இதுவரை வெளியிடப்படவில்லை.

982 பக்கமுடைய அமர்நாத்ராமகிருஷ்ணன் அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டால் மட்டுமே கீழடி தொடர்பான தெளிவான வரலாற்று முடிவுகள் கிடைக்கும். எனவே கீழடியில் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் மேற்கொண்ட முதல் 2 கட்ட அகழாய்வு அறிக்கையை வெளியிட உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி இளங்கோவன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், ''கீழடியில் மத்திய அரசு மேற்கொண்ட அகழாய்வு பணிகள் குறித்த அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 9 மாதங்களில் அறிக்கை வெளியிடப்படும்'' என்றார்.

இதையடுத்து ''கீழடி அகழாய்வு அறிக்கைகளை மத்திய அரசு 9 மாதங்களில் வெளியிட வேண்டும். வழக்கு முடிக்கப்படுகிறது'' என தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது.

## "நாட்டின் வளர்ச்சிக்கு சாவர்க்கரின் பங்களிப்பு உத்வேகமளிக்கிறது" நினைவு நாளில் அஞ்சலி செலுத்தி பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, பிப்.27-

சுதந்திரப் போராட்ட வீரர் வீர் சாவர்க்கரின் நினைவு நாளை முன்னிட்டு நேற்று அவரது புகைப்படத்திற்கு மலர் தூவி, மரியாதை செலுத்திய பிரதமர் நரேந்திர மோடி, நமது நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்காக பாடுபடுவதற்கு சாவர்க்கரின் பங்களிப்புகள் உத்வேகம் அளிப்பதாக தெரிவித்தார்.

"வீர் சாவர்க்கரின் நினைவு நாளான நேற்று அவருக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர் மோடி, "நமது நாட்டின் சுதந்திரம் மற்றும் ஒருமைப்பாட்டிற்கான அவரது வீரம் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இந்தியா



என்றென்றும் நினைவில் வைத்திருக்கும். அவரது பங்களிப்புகள் நமது நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்காக பாடுபட நம்மை ஊக்குவிக்கும்" என்று தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளர்.

வீர் சாவர்க்கர் என்று அழைக்கப்படும் விநாயக் தாமோதர் சாவர்க்கர், மே 28, 1883 அன்று நாசிக்கில் பிறந்தார். சுதந்திரப் போராட்ட வீரரான சாவர்க்கர், தேர்ந்த வழக்கறிஞராகவும், எழுத்தாளராகவும் பங்காற்றினார். 'இந்துத்வா' என்ற சொல்லை உருவாக்கியதற்காக பிரபலமாக அறியப்பட்ட சாவர்க்கரும், 'இந்து மகாசபா'வில் முன்னணிப் பிரமுகராகவும் இருந்தார்.

உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதே, சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்கத் தொடங்கிய சாவர்க்கர், புனேவில் உள்ள பெர்குசன் கல்லூரியில் தன் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தார்.

இந்தியா சுதந்திரத்தை அடைவதற்கான புரட்சிகர முறைகளை ஊக்குவிக்கும் வகையில் பல புத்தகங்களையும் சாவர்க்கர் எழுதி வெளியிட்டார். அவரது படைப்புகளில் ஒன்றான சிப்பாய் கலகத்தைப் பற்றிய 'இந்திய சுதந்திரப் போர்' புத்தகம் அப்போது பரபரப்பாக பேசப்பட்டது.

## "அடுத்த 100 நாட்கள் எங்களை வழிநடத்துபவராக ஜி.கே.வாசன் இருப்பார்" – அண்ணாமலை

சென்னை : பிப். 27-

"பாஜக கூட்டணிக்கு ஜி.கே.வாசன் முதல் அடியெடுத்து வைத்துள்ளார். அடுத்த 100 நாட்கள் எங்களை வழிநடத்தக் கூடிய நபராக ஜி.கே.வாசன் இருக்கப் போகிறார்" என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பாஜக கூட்டணியில் தமாகா இணைந்ததை அடுத்து, அக்கட்சித் தலைவர் ஜி.கே.வாசனை நேரில் சந்தித்தார் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை. கூட்டணியில் இணைந்ததற்கு ஜி.கே. வாசனை சந்தித்து வாழ்த்திய பிறகு, அண்ணாமலை பேட்டி அளித்தார்.

அதில், "தமிழகத்தில்



பாஜக கூட்டணியில் முதல் கட்சியாக தமிழ் மாநில காங்கிரஸ் இணைந்துள்ளது. பாஜக கூட்டணிக்குஜி.கே.வாசன் முதல் அடியெடுத்து வைத்துள்ளார். அடுத்த 100 நாட்கள் எங்களை வழிநடத்தக்கூடிய நபராக ஜி.கே.வாசன் இருக்கப் போகிறார். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு என தனிப்பெருமை ஒன்று உள்ளது. பிரதமர் மோடியை விட்டு வாசன் எங்கேயும் சென்றதில்லை. தமிழ்நாட்டில் ஆரம்பத்தில் இருந்து மோடிக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர் ஜி.கே.வாசன். பெரிய மாற்றத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 2024 மற்றும் 2026 தேர்தல்களில் இதன் தாக்கங்களை பார்க்கலாம். எங்கள் கூட்டணியைவலிமையான கூட்டணியாக மாற்ற வேண்டும் என்பதுதான் எங்களின் எண்ணம். பிற கூட்டணி கட்சிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியாது. மூன்றாவது முறையாக மோடி தலைமையான பாஜக ஆட்சி அமைய கூட்டணியைவலிமையாக மாற்ற வேண்டும். மோடி அரசின் சாதனைகளைச் சொல்லி தமிழ்நாட்டில் வாக்கு சேகரிப்போம். திமுகவால் அவர்கள் செய்த சாதனையை சொல்லி வாக்கு கேட்க முடியவில்லை. அதனால் எங்களை விமர்சிக்கிறார்கள். 2024 தேர்தலில் பாஜக மீது வைக்கப்படும் பிம்பங்கள் உடைக்கப்படும். கருத்தியல் அடிப்படையில் இங்கே இரண்டு கட்சிகளுக்கு தான் மோதல் உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

## அவதூறு வழக்கை நிராகரிக்கக் கோரி உதயநிதி மனு இபிஎஸ் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை : பிப். 27-

தனக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி தொடர்ந்த அவதூறு வழக்கை நிராகரிக்கக் கோரி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல்செய்த மனுவுக்கு எடப்பாடி பழனிசாமி பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மனுவில், 'கடந்த மாதம் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் சனாதனத்தை ஒழிக்க வேண்டுமென அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியிருந்தார். அவரது பேச்சு பெரும் விவாதப்பொருளாக மாறியது. இந்த விவகாரத்தில் உதயநிதி செப்டம்பர் 7-ம் தேதி அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், 'சனாதனம் என்றால் என்ன' என்பதை வீட்டினுள் பத்திரமாக அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்களில் இருந்து நான் தேடிக் கொண்டிருப்பதாக கூறியிருந்தார்.

கோடநாடு கொலை கொள்ளை வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக



ஆட்டுதாடியின் பின்னால் நீண்ட நாள் ஒளிந்திருக்க முடியாது என்றும், ஆடு ஒருநாள் காணாமல் போகும்போது, நீங்கள் என்ன ஆகப்போகிறீர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள் என்றும் பேசியுள்ளார்.

அவரது அறிக்கை தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், அவதூறு பரப்பு வகையிலும் உள்ளன. எனவே, தன்னை பற்றி பேச அமைச்சர் உதயநிதிக்கு தடைவிதிக்கவேண்டும். ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடாக வழங்க உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், உதயநிதி ஸ்டாலினுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து, தனக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி தொடர்ந்த அவதூறு வழக்கை நிராகரிக்கக் கோரி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என். சதீஷ்குமார் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, "எதன் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது?" என கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த உதயநிதி ஸ்டாலின் தரப்பு வழக்கறிஞர் ஈ.வி.சந்துரு, "இந்த விவகாரத்தில் மான நஷ்ட வழக்கு தொடர்வதற்கு எடப்பாடி பழனிசாமிக்கு முகாந்திரமே இல்லை. பொது வாழ்வில் இருக்கும் நபர் ஒருவர் குறித்து பொதுவாழ்வில் இருக்கும் மற்றொரு நபர் பேசியதில் தவறில்லை. பொது வெளியில் நடந்ததை பற்றியே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியுள்ளார். தனிப்பட்ட விவகாரம் குறித்து எதுவும் பேசவில்லை" என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, உதயநிதி ஸ்டாலினின் மனுவுக்கு எடப்பாடி பழனிசாமி பதிலளிக்க உத்தரவிட்டார். அப்போது எடப்பாடி பழனிசாமி சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண், கோடநாடு விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமியை தொடர்புப்படுத்தி பேச உதயநிதி ஸ்டாலினுக்கு விதிக்கப்பட்ட தடையை நீட்டிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்டு இடைக்கால தடையை நீட்டித்து உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை மார்ச் 15-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.



▶ புதுக்கோட்டை திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் பூச்சொரிதலை முன்னிட்டு நேற்று நடைபெற்ற பூப்பிரித்தல் நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, கலந்துகொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## பாலாற்றில் தடுப்பணை கட்ட ரூ.215 கோடி நிதி ஒதுக்கிடு அடிக்கல் நாட்டிய ஆந்திர முதல்வர் ஜெகன் அறிவிப்பு

குப்பம் : பிப். 27-

பாலாற்றில் தடுப்பணை கட்ட ரூ.215 கோடி நிதி ஒதுக்கியுள்ளதாக அடிக்கல் நாட்டு நிகழ்வில் ஆந்திர மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி அறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் குப்பம் பகுதியில் பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை ஒன்று கட்டப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று குப்பம் சாந்திபுரம் பகுதியில் நடைபெற்றது. இதில்தான் புதிய தடுப்பணைக்கு ரூ.215 கோடி நிதி ஒதுக்கீடு குறித்த அறிவிப்பை ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி வெளியிட்டார்.

இதற்கிடையே, பாலாற்று பகுதியில் புதிய தடுப்பணை கட்டுவது



தமிழக விவசாயிகளை வஞ்சிக்கும் செயல் எனத் தமிழக விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஏற்கெனவே கட்டப்பட்ட 22 தடுப்பணைகளால் தமிழகப் பாலாறு வறண்டு காணப்படும் நிலையில் கூடுதலாகப் புதிய தடுப்பணை ஒன்று கட்டினால் தமிழகத்துக்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட இனி கிடைக்க வாய்ப்பில்லை என்பதால் புதிய தடுப்பணை பணிக்கு தமிழக அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து பாலாறு நீர்வள ஆர்வலர் அம்பலூர் அசோகன் கூறும்போது, "1992 பன்மாநில நதிநீர் ஒப்பந்தத்தை ஆந்திர அரசு மீண்டும் மீறியுள்ளது. பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டிய விவகாரம் குறித்து ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் 2 வழக்குகள் தமிழக அரசு சார்பில் தொடரப்பட்டுள்ளது.

இதுதவிர பாமக சார்பிலும் ஒரு வழக்கு ஆந்திர அரசுக்கு எதிராகத் தொடரப்பட்டு அந்த வழக்குகள் தற்போது நடந்து வருகின்றன. இது தொடர்பான வழக்கு மார்ச் மாதம் 13-ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளது.

இந்நிலையில், ஆந்திர மாநில வனத்துறை அமைச்சர் இந்த வழக்குகள் முடிந்துவிட்டதாகப் பொய்யான ஒரு தகவலை செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார். இனியும் தமிழக அரசு தாமதிக்காமல் உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டும். அதற்கான ஆதாரங்களைத் திரட்டி புதிய அணை கட்டும் ஆந்திர அரசின் முயற்சிக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லையென்றால் பாலாறு என்று ஒன்று இருந்ததற்கான சுவடே இல்லாமல் போகும் நிலை எதிர்காலத்தில் வரும்" என்றார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

“உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்.”




# பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசனுக்கு தமிழக காங்கிரஸில் ஊடகம் மற்றும் செய்தி தொடர்புத்துறை தலைவராக பொறுப்பு

சென்னை : பிப். 27-

பொருளாதார நிபுணராக அறியப்படும் ஆனந்த் சீனிவாசனுக்கு தமிழக காங்கிரஸ் கட்சியில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் ஊடகம் மற்றும் செய்தி தொடர்புத்துறை தலைவராக ஆனந்த் சீனிவாசன் நியமிக்கப்படுவதாக காங்கிரஸ் கட்சியின் தமிழக பொறுப்பாளர் அஜோய் குமார் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



சென்னையைச் சேர்ந்த பொருளாதார நிபுணரான ஆனந்த் சீனிவாசன் நாட்டின் பொருளாதாரம், நிதி நிலைமை, நிதி மேலாண்மை வழிகாட்டுதல்கள் குறித்த சமூக வலைதள வீடியோக்கள் மூலம் பிரபலமானார்.

சமீப காலமாகவே மத்திய அரசின் பொருளாதாரம் குறித்து புள்ளி விவரங்களை கொண்டு மத்திய பாஜக அரசை விமர்சித்துவந்தார். இது தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வந்தார். இந்த நிலையில், அவருக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் ஊடகம் மற்றும் செய்தி தொடர்புத் துறை தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், சேதுராபட்டி ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.34.41 இலட்சம் மதிப்பீட்டில் திருநாடன்பட்டி சாலை மேம்பாட்டுப் பணியினை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், நேற்று (26.02.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# தமிழகத்தில் ஏரி குளம் ஆறுகளில் உள்ள கருவை ஆகாய தாமரைகளை அகற்றிட வேண்டும்

## தமாகா விவசாய அணி கோரிக்கை

புதுக்கோட்டை : பிப். 27-

தேர்தல் வாக்குறுதி 40ல் கூறியபடி ஏரி குளம் ஆறுகளில் உள்ள கருவை ஆகாயதாமரைகளை அகற்றிட வேண்டும் என்று தமிழக அரசுக்கு தமாகா விவசாய அணி கோரிக்கை வைத்துள்ளார்.

தமிழகத்தில் நீர் ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு தமிழகத்தில் அமைந்துள்ள ஏரி குளம் ஆறுகளில் மண்டிகிடக்கும் சீமை கருவேளமரங்களையும், ஆகாய தாமரை செடிகளையும் அகற்றி நீரின் கொள்ளலவு திறனை அதிகரித்திட வேண்டும். ஆளும் திமுக அரசு தனது தேர்தல் வாக்குறுதி 40ல் கூறியபடி அதை நிறைவேற்றிட வேண்டும். தற்போது பெரும்பாலான ஏரி குளங்களில்



யாரும் உட்புக முடியாத அளவு சீமை கருவேளஞ்செடிகளும், ஆகாய தாமரைகளும் புதராக மண்டி மழை காலங்களில் நீர் தேங்கமுடியாத சூழ்நிலை உள்ளது. எனவே தமிழக அரசு அவற்றை நீக்கி புரனமைத்து விவசாயிகள் பயன்பெரும் வகையில் செய்திட வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள அக்கினியாறு முழுவதும் கருவேளஞ்செடிகளும், யூக்கலிப்டஸ்மரங்களுமாகவும், ஆக்கிரமிப்பாலும் சுருங்கிவிட்டது.

இந்த அக்கினியாற்றின் மூலம் பல சிறு அணைக்கட்டு மூலம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் சாகுபடி செய்யும் நிலை உள்ளது. விவசாயிகள் பலமுறை கோரிக்கை வைத்தும் ஆற்றின் ஆக்கிரமிப்பை, கருவேளஞ்செடிகள், யூக்கலிப்டஸை அகற்றி சுத்தம் செய்து தூர்வாரி இதுவரை தரவில்லை. இனி வரும் காலங்களிலாவது விவசாயிகள் பயனடையுமாறு சுத்தம் செய்து ஆக்கிரமிப்பை அகற்றிட வேண்டும் என தமிழக அரசுக்கு தமாகா விவசாய அணி மாநில தலைவர் துவார் சி.ரெங்கராஜன் கோரிக்கை வைத்துள்ளார்.


# அமைச்சர் ஐ.பெரியசாமியை விடுவித்த உத்தரவு ரத்து : சென்னை ஐகோர்ட் அதிரடி

சென்னை : பிப். 27-

2006 முதல் 2011 வரையிலான ஆண்டு திமுக ஆட்சியின் போது, வீட்டு வசதித்துறை அமைச்சராக ஐ.பெரியசாமி பதவி வகித்தார். அப்போது, வீட்டு வசதி வாரியத்துக்கு சொந்தமான வீட்டை முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பாதுகாவலருக்கு முறைகேடாக ஒதுக்கியதாக இவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது.

இதனை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், அமைச்சர் ஐ.பெரியசாமியை வழக்கில் இருந்து விடுவித்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் தீர்ப்பளித்தது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்ய, சென்னை ஐகோர்ட் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தார்.

அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், நீதிபதி தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்திருந்தார். இந்நிலையில் இந்த வழக்கில் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் நேற்று



தீர்ப்பு வழங்கினார். அவரது தீர்ப்பில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீடு முறைகேடு வழக்கில் அமைச்சர் ஐ.பெரியசாமியை விடுவித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார். வழக்கை மீண்டும் விசாரிக்க சிறப்பு நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டார். வழக்கை தினமும் விசாரணை நடத்தி வரும் ஜூலைக்குள் முடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ஐ.பெரியசாமி மார்ச் 28ந் தேதிக்குள் நேரில் ஆஜராகிஒருலட்சம்ரூபாய்க்கு பிணை செலுத்த வேண்டும் என்றும் ஆஜராகாவிட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக பிடிவாரண்ட் பிறப்பிக்கலாம் என்றும் ஐகோர்ட் தெரிவித்துள்ளது. முறையாக ஒப்புதல் பெற்று வழக்கை நடத்த லஞ்ச ஒழிப்புத்துறைக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

# பரந்தூர் விமான நிலைய எதிர்ப்பு போராட்டம்

# 150-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கைது போலீஸ் நடவடிக்கையால் பரபரப்பு

காஞ்சிபுரம் : பிப். 27-

காஞ்சிபுரம் அருகே பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிராக போராட்டம் நடத்த முயன்ற விவசாயிகள் 150-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தடுத்து கைது செய்ய முயன்றபோது போலீஸாருக்கும், விவசாயிகளுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.



பரந்தூர் புதிய விமான நிலையத்துக்கான நில எடுப்புக்கான முதல்நிலை அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. காஞ்சிபுரம் வட்டத்தில் உள்ள பொடவூர் கிராமத்தில் நிலம் எடுப்பதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் தெரிவிக்கலாம் என்றும், இந்த ஆட்சேபனைகள் மீது ஏப்ரல் 4-ம் தேதி விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் நிலம் எடுப்புக்கான மாவட்ட வருவாய் அலுவலர் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், பரந்தூர் புதிய விமான நிலையத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கிராம மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஏகனாபுரம் கிராமத்தில் இருந்து காரை அருகே உள்ள நிலம் எடுப்பு அலுவலகத்துக்கு பேரணியாக வந்து முற்றுகையிட முடிவு செய்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு காவல் துறையினர் அனுமதி அளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து டிராக்டரில் ஊர்வலமாக செல்ல கிராம மக்கள் நேற்று ஏகனாபுரம் அருகே கூடினர். அப்போது போலீஸார் அவர்களை தடுத்து கைது செய்ய முயன்றனர்.

போராட்டத்தை தொடங்கும் முன்பே எதற்காக வந்து கைது செய்கிறீர்கள்? என்று பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது வலுக்கட்டயமாக தரதரவென விவசாயிகள் மற்றும் பெண்களை இழுத்துச் சென்று போலீஸார் கைது செய்னர். இதனால் போலீஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து 150-க்கும் மேற்பட்டோரை கைது செய்த போலீஸார் சுங்குவார்சத்திரத்தில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் தங்க வைத்திருந்தனர். அங்கு அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் காரணமாக ஏகனாபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் பரபப்பாககாணப்பட்டது. இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் உள்பட அருகாமையில் உள்ள 4 மாவட்ட போலீஸாரும் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழகத்தில் விபத்தில்லாமல் பணிபுரிந்த அரசுப் பேருந்து ஓட்டுநர்களுக்கு தங்க, வெள்ளி நாணயங்கள் வழங்கல்

சென்னை : பிப். 27-

மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்து கழகங்களில், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநருக்கு 4 கிராம் தங்க நாணயமும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு தலா 100 கிராம் வெள்ளி நாணயம் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மறைந்த முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழக முதல்வரின் உத்தரவுக்கிணங்க, நேற்று மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், கடந்த 10 ஆண்டுகளுக்கு



மேலாக விபத்தில்லாமல் பணிபுரிந்த மாநகர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 335 ஓட்டுநர்களுக்கு தலா 100 கிராம் வெள்ளி நாணயம் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார்.

மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லாமல் பணிபுரிந்த ஒரு ஓட்டுநருக்கு 4 கிராம் தங்க நாணயமும், 10 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லாமல் பணிபுரிந்த 24 ஓட்டுநர் மற்றும் ஓட்டுநர் உடன் கூடிய நடத்துநர்களுக்கு வெள்ளி நாணயம் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து, பணியின்போது இறந்த பணியாளர்களின் 6 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான நடத்துநர் பணி நியமன ஆணையினை வழங்கினார்.

இவ்விழாவில், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் இரா. மோகன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களின் 2022-23 -ஆம் ஆண்டிற்க்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு இடங்களான காரைக்கால் மேடு பகுதியில் உட்புறச் சாலைகளை மேம்படுத்தும் பணிக்கான பூமி பூஜை ரூபாய் 38, 58, 370 /= (ரூபாய் 38 இலட்சத்து 58 ஆயிரத்து 370 ரூபாய்) மதிப்பீட்டிலும் மற்றும் கிளிஞ்சல்மேடு பகுதியில் உட்புறச் சாலைகளை மேம்படுத்தும் பணிக்காக 44,84,565 / =ரூபாய் 44 லட்சத்து 84 ஆயிரத்து 565 ரூபாய் மதிப்பீட்டிலும் இரண்டு இடங்களில் நேற்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமுருகன் தலைமையில் பூமி பூஜை நடைபெற்றன. இந்த நிகழ்வில் நகராட்சி ஆணையர் சத்யா நகராட்சி உதவி பொறியாளர் லோகநாதன் மற்றும் மற்றும் உதவி பொறியாளர்கள் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் இன்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# மேல்மா சிப்காட் எதிர்ப்பு போராட்டத்துக்கு விவசாய சங்கங்கள் ஆதரவு

திருவண்ணாமலை : பிப். 27-

மேல்மா சிப்காட் விரிவாக்கத் திட்டத்தை எதிர்த்துப் போராடும் விவசாயிகளுக்குப்பல்வேறு விவசாயச் சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே மேல்மா சிப்காட் விரிவாக்கத் திட்டத்துக்கு 3,200 ஏக்கர் விளை நிலங்களைக் கையகப்படுத்தத் தமிழக அரசுமுனைப்புகாட்டுகிறது. இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துக் கடந்த 7 மாதங்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஏழு விவசாயிகள் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பின்னர் அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு காரணமாகஅனைவரையும் தமிழக அரசு விடுவித்தது. மேலும்சட்டப்பேரவையில்



நிலமற்றவர்கள் போராடுகிறார்கள் என்ற பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலுவின் கருத்துக்குக் கண்டனம் தெரிவித்துஉண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், மேல்மா கூட்டுச்சாலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைக் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு விவசாயச் சங்கங்களின் கூட்டு இயக்கம், தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு கழகம், ஏர்முனை, இந்திய விவசாயிகள் சங்கம், காவிரி வைகை குண்டாறு நீர்ப்பாசன விவசாயச் சங்கம், ஐக்கிய விவசாயச் சங்கம்,கரும்பு விவசாயிகள் அணி, தமிழ் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்து ஆதரவு தெரிவித்தனர்.

அப்போது அவர்கள் பேசும் போது, “மேல்மா சிப்காட் விரிவாக்கத் திட்டத்துக்கு விவசாய நிலங்களைக் கையகப்படுத்தும்முடிவைத் தமிழக அரசு கைவிட வேண்டும், விவசாயிகள் மீதானவழக்கைரத்துசெய்ய வேண்டும்” என்றனர்.




செங்கல்பட்டு மாவட்ட பத்திரிகையாளர்கள் நல சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் மார்க்கெட் ரோடு அருகில் உள்ள தனியார் கட்டிடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சிறு-குறு, வாரம் மற்றும் மாத பத்திரிகையாளர்கள் என 25 பேர் கலந்துகொண்டனர். இதில் அனைவரிடமும் தனித்தனியாக கருத்துக்கள் கேட்கப்பட்டன. பின்னர் நீண்ட ஆலோசனைக்கு பிறகு நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் சங்கத்தின் மாவட்ட தலைவராக தனசேகரன், செயலாளராக பார்த்திபன், பொருளாளராக லோகநாதன், மாவட்ட மகளிர் அணி தலைவராக அலமேலு, செங்கல்பட்டு தாலுக்கா தலைவராக அன்பழகன், துணை தலைவராக சிவராமன், மதுராந்தகம் தாலுக்கா துணை தலைவராக சதாசிவம், தாம்பரம் தாலுக்கா துணை செயலாளராக வெங்கடேஷ், பல்லாவரம் தாலுகா தலைவராக முஸ்தபா, செயற்குழு உறுப்பினர்களாக பாஸ்கர், ஐயப்பன், சாய்பாலா, வெங்கடேசன், கோவிந்தராஜ் , வெங்கடேசன், கண்ணன், ஆனந்தன், சுரேஷ்குமார் முரளி, நவீன், ஸ்ரீசக்தி, சட்ட ஆலோசகராக மூத்த வக்கீல் சொக்கலிங்கம் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். முன்னதாக செங்கல்பட்டு தாலுக்கா தலைவர் அன்பழகனின் தந்தை அர்ஜுனன் மறைவுக்கு கூட்டத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டன.

# கியான்வாபி மசூதியில் தெற்கு பாதாள அறையில் இந்துக்கள் வழிபடுவதை எதிர்த்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி

புதுடெல்லி : பிப். 27-

கியான்வாபி மசூதியின் தெற்கு பாதாள அறையில் இந்துக்கள் மத வழிபாடு நடத்த அனுமதி அளித்த மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை அலகாபாத் உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

வழக்கினை விசாரித்த நீதிபதி ரோகித் ரஞ்சன் அகவர்வால், "வழக்கின் அனைத்து ஆவணங்களையும் ஆராய்ந்து, அனைத்து தரப்பின் வாதங்களையும் பரிசீலித்த பின்னர் கடந்த, ஜன.1, 2024-ல் மாவட்ட நீதிமன்றம்,



டி.எம். வாரணாசியை சொத்துரிமையாக நியமித்ததையும், ஜன.31, 2024ம் தேதி கியான்வாபி மசூதியின் தெற்கு பாதாள அறையில் இந்துகள் வழிபாடு நடத்த வழங்கிய தீர்ப்பில் தலையிட எந்த முகாந்திரத்தையும் இந்த நீதிமன்றம் காணவில்லை" என்று கூறி மனுவினைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். முன்னதாக, பிப்.15ம் தேதி முதல் நான்கு நாட்கள் இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்டிருந்த நீதிபதி அகர்வால் தீப்பினை ஒத்திவைத்திருந்தார்.

முன்னதாக, கியான்வாபி மசூதியின் பாதாள அறையில் இந்துக்கள் வழிபாடு நடத்த அனுமதி அளித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை அவசர வழக்காக விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்ததைத் தொடர்ந்து, மசூதியை நிர்வகித்து வரும் அஞ்சுமன் இன்தசாமியா மசூதி அறக்கட்டளை, பிப்.1ம் தேதி அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தது.

# எல்லாபுரம் ஒன்றிய குழு கூட்டத்தில் மைக் வசதி ஏற்படுத்தி தரக்கோரியதால் வாக்குவாதம் ஏற்பட்டது



ஊத்துக்கோட்டை, பிப்27–

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ஒன்றியக் குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு,ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கேரமேஷ்தலைமைதாங்கினார். துணை பெருந்தலைவர் கே.சுரேஷ்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொற்செல்வி, சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மன்ற பொருட்களை வட்டார வளர்ச்சி அலுவலக மேலாளர் கார்த்திகேயன் வாசித்தார்.

அப்போது 15-வது மத்திய நிதி குழு மானியம் 2023-24 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் செம்பேடு ஊராட்சி செம்பேடு கிராமத்தில் அங்கன்வாடி கட்டிடம் பழுது பார்க்க ரூ.3 லட்சத்து 23 ஆயிரத்து 481,மாம்பளம் ஊராட்சி பள்ளி தெருவில் பேவர் பிளாக் சாலை 65 மீட்டர் பணிக்கு ரூ.3 லட்சத்து 24 ஆயிரத்து 411 என மொத்தம் ரூ.6 லட்சத்து 47 ஆயிரத்து 892 தொகையில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேலும்,இந்த ஒன்றியத்தில் உள்ள 53 கிராம ஊராட்சிகளில் பருவ மழை காரணமாக தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள ப்ளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு வாங்கியமைக்கு ரூ.15 லட்சத்து 88 ஆயிரத்து 090 பொது நிதியில் இருந்து வழங்கியதற்கு ஒப்புதல் கோரப்பட்டது. அப்போது கூட்டத்தில் கலந்து கொண்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் குழந்தைவேலு,சரவணன்,ரவி, சிவாஜி,தட்சிணாமூர்த்தி, ஜமுனா,திருமலை,சியாமளா, ஜெயலட்சுமி ஆகியோர் ஊராட்சியில் நடைபெறும் பணிகள் குறித்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளான ஒன்றியகுழு உறுப்பினர்களான எங்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர்கள் தகவல் அளிப்பதில்லை. அப்படி இருக்க ஊராட்சிகளுக்கு வழங்கும் நோய் தடுப்பு நடவடிக்கை பொருட்களுக்கு ஒன்றிய பொது நிதியில் இருந்து ஏன்? செலவு செய்ய வேண்டும். என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் பேசுவதற்கு வசதியாக மைக் வசதி ஏற்படுத்தி தரக்கோரி பலமுறை கூறியும் பயனில்லை.ஒன்றியக் குழு தலைவர்,துணைத் தலைவர், ஒன்றிய குழு உறுப்பினர்கள் பெயர்கள் அடங்கிய கல்வெட்டு அமைக்ககோரியும் இதுவரையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று கூறினர்.மேலும், 82-பனப்பாக்கம் ஊராட்சியில் ஒரு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கிய பிரச்சனையில் தலைவர் மற்றும் அப்போது பணியாற்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க கோரி கலெக்டரிடம் மனு கொடுத்தும் இதுவரையில் எந்த? வகையான நடவடிக்கையும் எடுக்கவில்லை.என்று குற்றம் சாட்டினர்.இதனால் கூட்டத்தில் கூச்சலும்,குழப்பமும், பதட்டமும்,பரபரப்பும் நிலவியது.முன்னதாக உடல் நலக்குறைவால் மரணம் அடைந்த ஒன்றிய குழு உறுப்பினர் விவேகானந்தனுக்கு கூட்டத்தில் மவுன அஞ்சலி செலுத்தினர்.

# லால்பேட்டையில் தமிழ் நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் பொதுக்கூட்டம்



காட்டுமன்னார் கோவில், பிப்.27–

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே லால்பேட்டையில் தமிழ் நாடு தவ்ஹீத் ஜமாத் கடலூர் தெற்கு மாவட்டம், மற்றும் லால்பேட்டை கிளையின் சார்பில் பொதுக்கூட்டம்லால்பேட்டை கை காட்டியில் நடந்தது. இதற்கு மாவட்ட தலைவர் சாஜிதுர் ரகுமான்தலைமை தாங்கினார்.

மாவட்ட நிர்வாகிகள் அப்துல் ரகுமான் ,ரகமத்துல்லா, அஜிதுஆகியோர்முன்னிலை வகித்தனர்.இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாநிலத் தலைவர் எம் எஸ் சுலைமான் கேள்விக்குறியாக்கப்படும் மதச்சார்பின்மை என்ற தலைப்பிலும் துணைத் தலைவர் இ பாரூக் சமூக தீமைகளும் இன்றைய முஸ்லீம்களும் எனும் தலைப்பிலும் மேலாண்மை குழு உறுப்பினர் சபிர்அலி அன்பான அழைப்பு எனும் தலைப்பிலும் அஸ் ஸாலிஹாத் அரபுகல்லூரி ஆசிரியர் அஜிமாபானு பெற்றோர்களே உங்களை தான் எனும் தலைப்பிலும் . பேசினர் அதைத் தொடர்ந்துமாநிலதலைவர் எம்.எஸ் சுலைமான் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது கூறிய அவர் மத்திய அரசு பாபர் மசூதியை அடுத்துதொடர்ச்சியாக முஸ்லிம்களின் பள்ளிவாசலை குறிவைப்பதை கைவிட வேண்டும். வருகிற பாராளுமன்ற தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்துவதை தவிர்த்து வாக்கு சீட்டு முறையை தேர்தல் ஆணையம் கடைபிடிக்க வேண்டும்.முஸ்லிம்களின் நெடுங்கால கோரிக்கையான 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை உயர்த்தி அதிக எண்ணிக்கையில் உள்ள முஸ்லிம்களுக்கு ஏழு புள்ளி ஐந்து சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என தமிழக அரசே இட ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நீதி கேட்டு போராடும் விவசாயிகள் மீது தாக்குவதை மத்திய அரசு நிறுத்த வேண்டும் , லால்பேட்டையில் அரசு மருத்துவமனை, கலைக்கல்லூரி அமைத்து தர வேண்டும் மேலும் வருகிற பாராளுமன்றத் தேர்தலில் தவ்ஹீத் ஜமாத் அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராக செயல்பட்டுவரும் மற்றும் பிஜேபி,கட்சி மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படும் கட்சிகளை ஆதாரிக்க மாட்டோம், மேலும் தமிழகத்தில் முஸ்லிம்களுக்கு எந்த -கட்சி உறுதுணையாக செயல்படுகிறதோ அந்த கட்சியை தவ்ஹீத் ஜமாத் ஆதரிக்கும் என இவ்வாறு கூறினார். முடிவில் கிளை பொறுப்பாளர் அப்துல்லா நன்றிகூறினார்

# காரைக்கால் கடற்கரையில் தொடர் உயிரிழப்புகள் கடற்கரை பகுதியை கண்காணிக்க தற்காலிக காவல் மையம்



காரைக்கால்.பிப்,27

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமிக்கு பிறகு காரைக்கால் கடலின் சீற்றம் முற்றிலும் மாறுபட்டுள்ளதால், கடற்கரையில் ஆங்காங்கே கடலில் குளிப்பது ஆபத்தானது என்று மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையின் சார்பாக எச்சரிக்கை பலகை வைத்தும் அதையும் மீறி சுற்றுலாப் பயணிகள் காரைக்கால் கடற்கரையில் ஆபத்தை உணராமல் கடலில் குளித்து உயிரிழப்புகள் ஏற்படுவதுவாடிக்கையாக உள்ளது.

இதை தடுப்பதற்கு காரைக்கால் கடலோர காவல் நிலையத்தில் போதுமான காவலர்கள் இல்லாததும் ஒரு காரணமாகும் சுற்றுலா பயணிகள் கடலில் குளிப்பதை தடுக்கும் விதமாக காவல்துறை மட்டுமல்லாமல் நீச்சல் தெரிந்த மெரைன் தன்னார்வலர்களை பணியில் அமர்த்தி காரைக்கால் கடலில் குளிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் கடற்கரையை ஒட்டி தற்காலிக காவல் மையம் அமைக்க காரைக்கால் மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மணீஷ் தலையிலான மாவட்ட காவல் துறை முடிவெடுத்தது. இதனை அறிந்த ரோட்டரி கிளப் ஆப் காரைக்கால் நிர்வாகிகள் அதற்கான செலவை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டு ரூபாய் இரண்டரை லட்சம் செலவில் தற்காலிககாவல் மையம் அமைப்பதற்கான பூமி பூஜை இன்று நடைபெற்றது.

இதில் மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மணீஷ், காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன், ரோட்டரி கிளப் ஆப் காரைக்கால் தலைவர் அருள்ராஜ் செயலாளர் சிங்காரவேலு பொருளாளர் செல்வராஜ் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் மற்றும் காவல் துறையினர் கலந்து கொண்டனர். மக்களின் நலன் கருதி தற்காலிக காவல் மையம் அமைக்க நிதி உதவி அளித்த ரோட்டரி கிளப் ஆப் காரைக்கால் அமைப்பினருக்கு சமூக ஆர்வலர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



▶ சென்னையில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 76 வது பிறந்தநாளை அக்கட்சியினர். பொதுமக்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கி கொண்டாடி வருகின்றனர்.இதன் ஒரு பகுதியாக வடசென்னை பழைய வண்ணாரப்பேட்டைமேயர் பாசுதேவ் தெரு பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பகுதி செயலாளர் எம். என். ஸ்ரீனிவாசபாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அதிமுக வடசென்னை வடகிழக்கு மாவட்டசெயலாளர் ஆர் எஸ் ராஜேஷ்,தையல் மிஷின், இஸ்திரி பெட்டி அன்னக்கூடை. இட்லி குண்டான், அரிசி மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு என மொத்தம் 5076 பேருக்கு வழங்கினார். இதில் அந்த தொகுதியில் தினசரி சாலையோரம் சிற்றுண்டி கடை மற்றும் தள்ளு வண்டி கடைகளில் இட்லி வியாபாரம் செய்வோரை தேடி கண்டுபிடித்து அவர்களுக்கு இட்லி அவிப்பதற்கான(இட்லி குண்டான்)பாத்திரங்களையும் வழங்கினார். இதில் அதிமுக கழக அமைப்பு செயலாளரான இராயபுரம் மனோ மற்றுழ் தலைமை கழக பேச்சாளர் சிவசங்கரி , ஆர்.கே நகர் மகளிர் அணி மாவட்ட செயலாளர் நாகரத்தினம், வட்ட செயலாளர், மற்றும் பிற அணி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



▶ புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரி முனைவர் து.மணிகண்டன் அறிவுருத்தலின் பேரில் பொதுமக்கள் கூடும் பல்வேறு இடங்கள் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி வளாகம் ஆகியவற்றில் வரும் 29-ஆம் தேதி வரை இந்த தேர்தல் விழிப்புணர்வு வாகனம் சென்று பொதுமக்களுக்கும் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் மேலும் குறிப்பாக இளம் வாக்காளர்களுக்கும் தேர்தலில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் நேர்மையான முறையில் வாக்களிப்பதின் அவசியம் குறித்தும் நமது வாக்கு நமது உரிமை மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் 100 % சதவீத வாக்குகள் பதிவு ஆவதற்கு உண்டான விழிப்புணர்வு நிகழ்வுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் தொடர் நிகழ்வாக நேற்று திங்கட்கிழமை காலை காரைக்காலில் அமைந்துள்ள பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கு குறிப்பாக இளம் வாக்காளர்களுக்கு இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் பிரான்சிஸ் சேவியர் மற்றும் ஸ்வீப் ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் உள்ளிட்டவர்கள் அடங்கிய குழுவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வை ஏற்படுத்தினார்கள்.



▶ காரைக்கால் நேரு யுவகேந்திரா அமைப்பின் சார்பாக இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் திருநள்ளார் தொகுதியில் உள்ள கிராமத்தில் கபடி மற்றும் வாலிபால் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வெற்றிப் பெற்றனர். வெற்றிப்பெற்ற இளைஞர்களுக்கு நினைவு பரிசும் சான்றிதழும், போட்டிகளில் பங்குகொண்டவர்களை ஊக்குவிக்கும் வகையில் பங்கேற்புச் சான்றிதழும் பச்சூர் காளியம்மன் கோவில் தெருவில் உள்ள சமுதாய கூடத்தில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கிராம முக்கியஸ்தர்கள் பூவேந்திரன், முருகையன், கங்கா கௌதம் ஆகியோர் தலைமையேற்று பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் வெண்முகி , நேரு யுவகேந்திரா அமைப்பின் பாலா, புரட்சியாளர் அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றம் சிறப்பு அழைப்பாளர் சமூகசேவகர் மோகன் மாணவர்களுக்கு பாராட்டு மற்றும் நினைவு பரிசு கொடுத்து பாராட்டினார்



▶ கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 76 வது பிறந்தநாள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் நகர அலுவலகம் மற்றும் அம்மா பேரவை நகர அலுவலக திறப்பு விழா நடைபெற்றது நிகழ்ச்சியில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் கே எஸ் கே பாலமுருகன் தலைமை தாங்கினார் நகர செயலாளர் எம் ஜி ஆர் தாசன் முன்னிலை வகித்தனர் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளரும் சிதம்பரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான கே ஏ பாண்டியன் காட்டுமன்னாரகோயில் கோவில் அதிமுக நகர அலுவலகத்தை குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார் மேலும் பொது மக்களுக்கு வேட்டி சேலை அன்னதானத்தை வழங்கினார் முன்னதாக ஜெயலலிதா உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவ அணி மருத்துவர் பாலசுப்பிரமணியன் ஆர் டி லெனின் கோகுலகிருஷ்ணன் மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் வனிதா ரவிச்சந்திரன் ஜான்சன் துரை, நிர்வாகிகள் மாவட்ட நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்

# திருவிடைக்கழி ஸ்ரீ தில்லை காளியம்மன் கோயில் கும்பாபிஷேகம்



தரங்கம்பாடி, பிப்.27–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா திருவிடைக்கழி ஊராட்சி வடக்கு வடக்கு தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு ஸ்ரீ தில்லை காளியம்மன் கோவில் கும்பாபிஷேகம் திங்கள்கிழமை நடைபெற்றது.'

திருவிடைக்கழி ஊராட்சி வடக்கு தெருவில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ தில்லை காளியம்மன் ஆலய திருப்பணிகள் முடிக்கப்பட்டு கோயிலை முன்பு யாகசாலை அமைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கால யாக பூஜை, விக்னேஸ்வர பூஜை, பூர்ணாஹுதி மஹா தீபாரணை நடைபெற்றது.

திங்கட்கிழமை காலையில் விக்னேஸ்வர பூஜை, இரண்டாம் கால யாக பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து சிவாச்சாரியார் ஸ்ரீ நந்தகுமார் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் புனித நீர் அடங்கிய கலசங்கள் கோயிலை வளம் வந்து தில்லை காளியம்மன் ஆலய விமானத்தில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்து தீபாரதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்களை கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை கிராமவாசிகள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

# பூச்சிஅத்திப்பேடு அருள்மிகு ஸ்ரீ அங்காள ஈஸ்வரி–பெரியாயி அம்மன் ஆலயத்தின் 10–ம் ஆண்டு தீமிதிவிழா நடைபெற்றது



ஊத்துக்கோட்டை,பிப்27–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பூச்சிஅத்திப்பேடு ஊராட்சியில், மகாலட்சுமி நகரில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ அங்காள ஈஸ்வரி மற்றும் பெரியாயி அம்மன் திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலில் 10-ம் ஆண்டு தீமிதிவிழா மற்றும் மாசி திருவிழா நடைபெற்றது. இதை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை காலை கிராம தேவதை செல்லியம்மன் ஆலயத்தில் இருந்து பக்தர்கள் பால்குடம் ஏந்தி கோவிலுக்கு வந்தனர். பின்னர்,அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். மாலை காப்பு கட்டும் நிகழ்ச்சியும், கொடியேற்றும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பின்னர், பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அருள்மிகு ஸ்ரீ அங்காள ஈஸ்வரி மங்கள வாத்தியம் முழங்க, வானவேடிக்கையுடன் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சனிக்கிழமை காலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், மதியம் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது. இரவு அக்கினி கப்பரை கரத்தில் ஏந்திய வண்ணம் அம்பாள் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை காலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் தூப- தீப ஆராதனை,மதியம் கோவில் வளாகத்தில் அம்மனுக்கு கூழ்வார்த்தல் நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது.மாலை காப்பு கட்டி விரதம் இருந்த 250 பக்தர்கள் வேம்பேடு கிராமம் செல்லியம்மன் ஆலயத்தில் புனித நீராடினர்.

பின்னர், வான வேடிக்கையுடன் மேளத்தாளம் முழங்க ஊர்வலமாக கோவிலுக்கு வந்தனர்.இரவு 7 மணிக்கு கோவில் எதிரே அமைக்கப்பட்டு இருந்த தீக்குண்டத்தில் ஒருவர் பின், ஒருவராக இறங்கி தீ மிதித்து தங்களது வேண்டுதலை நிறைவேற்றினர்.இரவு கோவில் வளாகத்தில் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.நேற்று காலை அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு மற்றும் விடாத்தி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,ஆலய நிர்வாகி அம்மன் அருளாளர் ஜி.வெங்கட்ராமன் தலைமை தாங்கினார்.இதில், ஆலய நிர்வாக குழுவினர் எஸ். சசிகுமார், எஸ்.மணிகண்டன், எம்.சுரேஷ்,எஸ்.சாந்தி,தர்மன், டி.அருஞ்சுனைமுத்து, விக்னேஸ்வரன், எம். மணிவண்ணன்,டி.கந்தன், டி.கணபதி,டி.கண்ணன், வேலன் மேஸ்திரி, திருமலை, முருகன், ராஜ்குமார்,ஆகாஷ் ராஜேந்திரன், அசோக் உள்ளிட்ட சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆலய விழா குழுவினர்கள், கிராம பொதுமக்கள், பெரியோர்கள், வியாபார நண்பர்கள், ஆலய நிர்வாக குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# சென்னை திருவொற்றியூரில் திமுக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம்

சென்னை

வடசென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மாதவரம் சுதர்சனம் தலைமையில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கேபி சங்கர் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் பகுதி செயலாளர்கள் தனியரசு மேற்கு பகுதி செயலாளர்



அருள் தாஸ் ,. மணலி மண்டல குழு தலைவர் ஏ.வி ஆறுமுகம் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மேலும் நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி அவைத்தலைவர் ஆசைதம்பி, தேர்தல் பொறுப்பாளர் தசரதன், ராமநாதன், கேபிள் டிவி ராஜா, பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார் சம்பத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் நான்கு கோடி ரூபாயை முறைகேடாக வசூல் செய்ததாக கூறி ஊழியர்கள் சாகும் வரை உண்ணாவிரதம்

காரைக்கால், பிப்,27

காரைக்கால் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தொடங்கி சிறப்பாக நடைபெற்று வந்தது. கடந்த 1995ஆம் ஆண்டு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் காலிப் பணியிடங்கள் ஏற்படும் போது பிரதமர் சங்கங்களின் ஊழியர்களைக் கொண்டு நிரப்புவோம் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சங்க ஊழியர்களின் எதிர்ப்பை மீறி மாவட்டம் முழுவதும் பிரதம (கிளை) சங்கங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வந்தது, இந்நிலையில் ஒப்பந்தத்தை மீறி அண்டை மாநிலங்களை சேர்ந்தவர்களை ஒன்றியத்தில் பணிய அமர்த்தி பணி நிரந்தரம் செய்து பதிவு உயர்வு கொடுத்து வருகின்றனர்.

இது ஒப்பந்தத்திற்கு எதிரானது எனவும், இதுபோல பதிவாளர் அனுமதி பெறாமல் பிரதம சங்கங்களில்



உற்பத்தியாகும் பாலுக்கு கமிஷன் தொகையாக லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் வசூல் செய்ததாகவும் அதன் மதிப்பு தற்போது 4,21,76,100 எனவும், முறைகேடாக பெறப்பட்ட இத்தொகையை திருப்பித் தர வலியுறுத்தி பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க ஊழியர்கள் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள சம்பவம் காரைக்காலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தங்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தை திருப்பி தராவிட்டால் உண்ணாவிரதத்தை திரும்ப பெற மாட்டோம் என பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுபோல பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்து பிரதம சங்கங்களுக்கு மேலாளர் என்று பலரை அனுப்பி அவர்களது ஊதியத்தை பிரதம சங்கங்களிடமிருந்தே கொடுத்து பல லட்சக்கணக்கான ரூபாய்களை பிரதம சங்கங்களிலிருந்து சுரண்டியதாகவும் அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

# ஆலங்குடியில் அதிமுக பொதுக்கூட்டம்



ஆலங்குடி, பிப்.27-

வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்களை திமுக அரசு ஏமாற்றி வருகிறது என முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் பேச்சு

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஒன்றியச் செயலர் பழனிச்சாமி தலைமை வகித்தார். கூட்டத்தில், முன்னாள் அமைச்சரும், விராலிமலை சட்டப்பேரவை உறுப்பினருமான சி.விஜயபாஸ்கர் பேசியது:

100 நாள் வேலையை 200 நாளாக உயர்த்தி வழங்குவதாக பொய் வாக்குறுதிகளை மக்களிடம் அளித்து வெற்றிபெற்றுவிட்டு, தற்போது, அதைச் செய்யாமல் 100 நாள் பணியாளர்களை காலை 7மணிக்கு வந்து விரல் ரேகை வைக்கச் சொல்லி அவதிக்குள்ளாக்கி வருகிறது திமுக அரசு. அதுமட்டுமல்ல ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் ஆயிரம் வழங்கப்படும் என அறிவித்துவிட்டு தகுதியுடையோருக்கு ஆயிரம் என 5 மாதங்களாக வழங்கப்பட்டு வருகிறது. திமுக ஆட்சிக்கு வந்து 33 மாதங்கள் ஆகிவிட்டது. அதனால், திமுக ஆட்சிக்கு வந்து ஆயிரம் வழங்காமல் பாக்கி வைத்துள்ள 28 மாதங்களுக்கு தலா ஆயிரம் என ரூ.28 ஆயிரத்தை பெண்கள் உள்ளூர் அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

மேலும், அதிமுக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் திட்டம், தாலிக்கு தங்கம், மாணவர்களு வழங்கப்பட்டு வந்த மடிக்கணினி, மகளிருக்கான ஸ்கூட்டர் மானியம் உள்ளிட்ட நலத்திட்டங்கள் தற்போதைய ஆட்சியில் முடக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டையில் 2020-ல் எனது முயற்சியில் பூங்கா அமைக்கும் பணி தொடங்கப்பட்டது, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இப்போது, அந்த பூங்காவிற்கு கலைஞர் பூங்கா என பெயர் சூட்டி திறந்து வைத்துள்ளனர், அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் அம்மா பூங்காவாக பெயர் மாற்றம் செய்யப்படும் என்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் ஜீவானாந்தம், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், துரை. தனசேகரன், குபேந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர், முடிவில் பேரூராட்சி முன்னாள் தலைவர் மனமோகன் நன்றி கூறினார்.

# கந்தர்வகோட்டை வட்டாரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் இ.நாம் ஆகியவற்றை சிறப்பாக பயன்படுத்துதல் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி



கந்தர்வகோட்டை, பிப்.27-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டத்தின் கீழ் மஞ்சப்பேட்டை கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் இ.நாம் ஆகியவற்றை சிறப்பாக பயன்படுத்துதல் பற்றிய விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

மேற்கண்ட பயிற்சிக்கு கந்தர்வகோட்டை வட்டார ஆலோசனைக்குழுத் தலைவர் நியூஸ் ராஜேந்திரன் தலைமையேற்று பேசுகையில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும், திட்டங்கள் முழுவதும் விவசாயிகளுக்கு சென்றடைய வேண்டும் என கேட்டுக்கொண்டார். இப்பயிற்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை கலந்துகொண்டு தமிழக அரசு விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் விவசாயிகள் அவற்றை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் எடுத்துக் கூறினார்கள்.

ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் பிரதீபா ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் செயல்பாடுகள் விவசாயிகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தினை பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் மின்னணு வர்த்தகம் மூலம் விவசாயிகள் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாகப்பயிற்சி அளித்தார், தோட்டக்கலை உதவி இயக்குநர் தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசினார், உதவிவேளாண்மை அலுவலர் சௌந்தர்ராஜ் வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை உழவர் சந்தை செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

முன்னதாக வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் வரவேற்று பேசுகையில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், பி.எம்.கிசான் திட்டம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக்கூறினார்கள். பயிற்சியின் இறுதியில் வேளாண்மை அலுவலர் விக்னேஷ் நன்றி கூறினார், ஒன்றிய கவுன்சிலர் நதியா, ஊராட்சி மன்றத் தலைவர் யமுனா, அட்மா தலைவர் உறுப்பினர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டனர், இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் செல்வன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர், இப்பயிற்சியில்கலந்துகொண்ட 40 விவசாயிகளின் சந்தேகங்களுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது.

# “ஜி.கே.வாசனை மூப்பனாரின் ஆன்மா மன்னிக்காது” – செல்வப்பெருந்தகை சாடல்



சென்னை : பிப். 27-

"தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எடுத்துள்ள முடிவை தமிழ் மாநில காங்கிரஸில் இருக்கிற உண்மையான தொண்டர்கள் எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இவர் எடுத்த முடிவின் காரணமாக ஜி.கே. மூப்பனாரின் ஆத்மா இவரை மன்னிக்காது" என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையை சந்தித்து பாஜக கூட்டணியில் சேருவதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் அறிவித்திருக்கிறார். தமிழகத்தில் எந்த அரசியல் கட்சியும் பாஜகவுடன் கூட்டணி வைக்க முன் வராத நிலையில், தமிழ் மாநில காங்கிரஸ் முதல் கட்சியாக பாஜகவுடன் இணைந்திருக்கிறது. தமிழக மக்களால் தொடர்ந்து வெறுக்கப்பட்டு வருகிற பாஜகவுடன் தமாகா கூட்டு சேர்ந்திருக்கிறது.

மறைந்த ஜி.கே. மூப்பனார் காங்கிரஸை விட்டு வெளியேறி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை தொடங்கி முதல் தேர்தலில் 1996ல் திமுகவுடன் கூட்டணி அமைத்து 20 மக்களவை தொகுதிகளில் வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றவுடன் தலைநகர் டெல்லிக்கு தமது காரில் வெற்றி பெற்ற 20 மக்களவை உறுப்பினர்களை தம்முடன் அழைத்துச் சென்று சோனியா காந்தியை நேரில் சந்தித்து அவரது வாழ்த்துகளை பெற்றார்.

ஏப்ரல் 1999ல் அன்று பிரதமராக இருந்த அடல்பிகாரி வாஜ்பாய் அரசு மீது காங்கிரஸ் கட்சி நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தது. அன்று தமிழ் மாநில காங்கிரஸில் ப. சிதம்பரம் உள்ளிட்ட மூன்று பேர் மக்களவை உறுப்பினர்களாக இருந்தார்கள். அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த சோனியா காந்தி, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவராக இருந்த மறைந்த ஜி.கே. மூப்பனாரை அழைத்து நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அந்த கோரிக்கையை ஏற்று தமிழ் மாநில காங்கிரசை சேர்ந்த மூன்று மக்களவை உறுப்பினர்களும் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் வாஜ்பாய் தலைமையிலான அரசு ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஆட்சியை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று வகுப்புவாத பாஜக ஆட்சியை அகற்றுவதற்கு காரணமாக இருந்த தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனாரின் எண்ணத்திற்கு எதிராக இன்று அவரது மகன் ஜி.கே. வாசன் வகுப்புவாத பாஜகவில் அரசியல் சுயநலத்தோடு கொள்கையை துறந்து கூட்டணியில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கிறார்.

காங்கிரஸ் இயக்கத்தில் மூப்பனார் மகன் என்ற ஒரே காரணத்திற்காக 11 ஆண்டுகள் மாநிலங்களவை உறுப்பினர், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கேபினட் அந்தஸ்துடன் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் என பல பதவிகளை காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி வழங்கியிருக்கிறார். தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எடுத்துள்ள முடிவை தமிழ் மாநில காங்கிரஸில் இருக்கிற உண்மையான தொண்டர்கள் எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்த முடிவின் காரணமாக மூப்பனாரின் ஆத்மா ஜி.கே.வாசனை மன்னிக்காது" என்று கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.



▶ தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் அடுத்த சுப்பிரமணியபுரம் வியாசா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் நன்மை தீமைகள் குறித்து பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, விளையாட்டுப்போட்டி வட்டார அளவில் நடைபெற்றது. கல்லூரி சேர்மன் வெள்ளத்துரை பாண்டியன் மற்றும் கல்லூரி நிர்வாக இயக்குனர் வெள்ளதாய் வழிகாட்டுதலின்படி வியாசா கல்லூரியின் ஆங்கிலத்துறை தலைவி ஞா.ஏஞ்சல் பிரியதர்ஷினி வரவேற்புரை, கல்லூரி முதல்வர் ஆர். ஈஸ்வரன் முன்னிலை வகித்தார், சிறப்பு விருந்தினராக நேரு யுவகேந்திராவின் ஒருங்கிணைப்பாளர்கள் சி.ஆர். சங்கர், ஆர். கார்த்திகேயன், அருணா ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். ஜனநாயக நாட்டில் ஒட்டு மொத்த முன்னேற்றமே வாக்களிப்பது, உங்கள் ஓட்டு உங்கள் உரிமை என்று வாக்குரிமையைப் பற்றிய விழிப்புணர்வை வியாசா கல்லூரி மாணவிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்புரையாற்றினார்கள். கல்லூரி முதல்வர், தேர்வு ஒருங்கிணைப்பாளர் சுஜாதா, நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ஆவுடையம்மாள், அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவியர்கள் ஆகியோர் வாக்காளர்களின் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர், நிறைவாக ஆங்கில உதவி பேராசிரியர் கவிதா நன்றி கூறி நிறைவு செய்தார் .



▶ மதுரை காமராஜர் சாலையில் உள்ள தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தில் மதுரை ஜல்லிக்கட்டு ரோட்டரி சங்கம் மற்றும் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் பவுண்டேஷன் சார்பாக மகளிர் தின விழா நடைபெற்றது. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய பெண் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மதுரை முத்து மற்றும் டெம்பிள் சிட்டி குமார் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்து விருதுகளை வழங்கினர், மேலும் தமிழ்நாடு வணிக சங்க பேரவை மாவட்டச் செயலாளர் அழகேசன் மற்றும் சுலைமான் ஊராட்சி மன்றத் தலைவர் சாகுல் ஹமீது, எஸ் கே மோகன், கே.ஏ.எஸ் குழுமம் ராணி ஆகியோர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



▶ தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் திமுக தலைவர் தமிழக முதல்வரின் ஆணைப்படிஇல்லம் தோரும் ஸ்டாலின் குரல் திண்ணைப் பிரச்சாரத்தை நமது தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் வழிகாடுதலின் படியும் கடையநல்லூர் நகரச் செயலாளர் எஸ்.அப்பாஸ் தலைமையில் கடையநல்லூர் தொகுதி பொறுப்பாளர் ஆவின் ஆறுமுகம் கடையநல்லூர் நகர அவைத்தலைவர் பெட்டி முருகையா ஆகியோர் முன்னிலையில் கடையநல்லூர் 27 வது வார்டில் துவக்கி வைத்தார், நிகழ்வில் கலந்துகொண்டோர் தலைமை செயற்குழு உறுப்பினர் மா.செல்லதுரை , 27 வதுவார்டு செயலாளர் சுடலை, 1 வது வார்டு செயலாளர் காளிமுத்து , 26வது வார்டு செயலாளர் பாலசுப்பிரமணியன் எரவி ,30 வதுவார்டு மாரி, 31 வதுவார்டு லட்சுமணன் , அப்துல் வஹாப் ,நகர விசாய அணி அமைப்பாளர் அப்துல் மஜீத் ,பைசல் , ஆகியோர் கலந்து கொண்டு திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.



▶ புதுக்கோட்டை அருகே உள்ள திருவப்பூரில் மிகவும் புகழ் பெற்ற அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் மாசிபெருந்திருவிழா பூச்சொரிதல் நடைபெற்றது, நகரில் பல்வேறு இடங்களிலிருந்து மின் ஒளியால் மேளதாளத்துடன் அலங்கரிக்கப்பட்ட ரத்தத்தில் பூக்களுடன் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கு வந்தடைந்தது, திரளான பக்தர்கள் வருகைதந்து சுவாமியை தரிசனம் செய்தனர்.

# அரியலூரில் இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்க தொடர் ஆர்ப்பாட்டம்



அரியலூர்,பிப்.27-

அரியலூர் மாவட்ட இடை நிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரியலூர் பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே, அரியலூர் மாவட்ட இடைநிலை பதிவு மூப்பு இயக்கம் சார்பில் நடைபெற்ற, கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்துக்கு, சங்கத்தின் அரியலூர் மாவட்டச் செயலாளர் அந்தோணி ஆனந்த் தலைமை வகித்தார், மாவட்டத் தலைவர் நடராஜன் வரவேற்று பேசினார், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயச்சந்திரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

சமவேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும் உள்பட, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் தொடர்பு முற்றுகை போராட்டம் நடத்தி வரும் ஆசிரியர்கள் கைது செய்யப்படுவதை கண்டித்து நடைபெற்ற இந்த தொடர் ஆர்ப்பாட்ட த்தில், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆல்பர்ட், மாவட்ட மகளிரணி நிர்வாகி செண்பகம், மாவட்டப் பொருளாளர் ரங்கநாதன், மாவட்ட துணை செயலாளர் மணிகண்டன் உட்பட, ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் கூட்டம்



அரியலூர், பிப்.27-

அரியலூரில் மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் கூட்டம், அதன் தலைவர் பொ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி செயலாளர் (பொறுப்பு) தமிழ் மணி முன்னிலை வகித்தார், அலுவலர் ராமராஜன் தீர்மானங்களை படித்தார், வரப்பெற்றுள்ள மாநில நிதிக்குழு மானிய நிதியில், மாவட்ட ஊராட்சி கவுன்சில் வாரியாக செயல்படுத்தப்பட வேண்டிய பணிகள் குறித்து தேர்வு செய்தல், மற்றும் பல்வேறு நிர்வாக செலவினங்கள் உட்பட, 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி குழு கவுன்சிலர்கள் ராமச்சந்திரன், நல்லமுத்து, குலக்கொடி, வசந்தமணி, சகிலா தேவி, ராஜேந்திரன், அன்பழகன், தனச்செல்வி மற்றும், மாவட்ட ஊராட்சி குழு இளநிலை உதவியாளர் சௌந்தர்யா, புள்ளியியல் அலுவலர் பாலசுப்பிரமணியன், சத்யா, கண்ணன், மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை திருவப்பூர் ஸ்ரீ செல்லாயிஅம்மன் கோவிலில் பூச்சொரிதல்விழா



புதுக்கோட்டை, பிப்.27-

புதுக்கோட்டை திருவப்பூர் அருகே அன்னம்மாள் புறத்தில் அருள்பாலித்துவரும் செல்லாயிஅம்மன் கோவிலில் பூச்சொரிதல் நடைபெற்றது, சுவாமிக்கு பாலபிஷேகம், பன்னீர், தயிர்,பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

மாலையில் ஸ்ரீ செல்லாயிஅம்மனுக்கு பூச்சொரியப்பட்டு தீபாராதனை நடைபெற்றது, திரளான பக்தர்கள் வருகைதந்து சுவாமியை தரிசனம் செய்தனர்.

# ஆவுடையார்கோவில் அருகே ஏம்பல் ஸ்ரீ முத்தையா சுவாமி ஆலய மாசி மக திருவிழாவை முன்னிட்டு மாட்டு வண்டி எல்கை பந்தயம்



ஆவுடையார்கோவில், பிப்.27-

ஏம்பல் அருள்மிகு ஸ்ரீமுத்தையா சுவாமி ஆலய மாசி மக திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாட்டு வண்டி எல்கை பந்தயத்தில் 69மாட்டு வண்டி ஜோடிகள் கலந்துகொண்டன, சாலை நெடுகிலும் இருபுறமும் நின்று ஆரவாரத்துடன் பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே ஏம்பல் அருள்மிகுஸ்ரீ முத்தையா சுவாமிமாசி மக திருவிழாவை முன்னிட்டு மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது. இந்த பந்தயமானது பெரியமாடு நடுமாடு, கரிச்சான் மாடு என மூன்று பிரிவுகளாக நடைபெற்றது, இதில் புதுக்கோட்டை, சிவகங்கை, திண்டுக்கல், மதுரை,தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து 69ஜோடி மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன.

பெரிய மாட்டு வண்டியில் 15 ஜோடிகளும் நடு மாட்டு வண்டி பந்தயத்தில் 16ஜோடிகளும், கரிச்சான் மாட்டுவண்டியில் 38 ஜோடிகளும் கலந்துகொண்டன, பெரியமாட்டு வண்டிக்கு 9கிலோ மீட்டரும் நாடு மாட்டு வண்டிக்கு 8 கிலோமீட்டர் கரிச்சான் மாட்டுவண்டிக்கு 7 கிலோ மீட்டர் எனஎல்கை நிர்ணயிக்கப்பட்டு போட்டியானது நடைபெற்றது. சாலையில் துள்ளிக்குதித்து போட்டி போட்டுக் கொண்டு சீறிப்பாய்ந்த மாட்டுவண்டிகளை சாலை நெடுகிலும் இரு புறங்களிலும் நின்று ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

இந்த மாட்டு வண்டி பந்தயத்தில் முதல் நான்கு இடங்களை பிடித்த மாட்டு வண்டிகளின் உரிமையாளர்களுக்கு சுமார் 2 லட்சம் மதிப்பிலான ரொக்கப்பரிசு,வெள்ளி தார்கம்பு,வெள்ளி நாணயம் வழங்கப்படது,இந்த பந்தய விழாவை ஏம்பல் நாட்டார்களும் இளைஞர்களும் சேர்ந்து நடத்தினர்.

# டெல்லி மதுபான ஊழல் தொடர்பான பணமோசடி வழக்கில் அமலாக்கத் துறையின் 7-வது சம்மனை நிராகரித்த அரவிந்த் கேஜ்ரிவால்

புதுடெல்லி : பிப். 27-

டெல்லி மதுபான ஊழல் தொடர்பான பணமோசடி வழக்கில் அமலாக்கத் துறை அனுப்பிய 7-வது சம்மனையும் டெல்லி முதல்வரும் ஆம் ஆத்மி கட்சி தேசிய ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கேஜ்ரிவால் நிராகரித்துள்ளார். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் அமலாக்கத் துறை சட்ட நடைமுறைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று ஆம் ஆத்மி கட்சிக் கூறியுள்ளது.

இதுகுறித்து ஆம் ஆத்மி கட்சி கூறிகையில், "இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தில் உள்ளது. வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணை மார்ச் 16ம் தேதி நடக்க இருக்கிறது. எனவே அமலாக்கத் துறை தினமும் சம்மன் அனுப்புவதை நிறுத்திவிட்டு பொறுமையாக நீதிமன்றத்தின் முடிவுக்காக காத்திருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளது.

டெல்லியில் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் தலைமையில் ஆம் ஆத்மி ஆட்சி நடைபெறுகிறது. கடந்த 2021-ம் ஆண்டில் புதியமதுபான கொள்கையை டெல்லி அரசு அமல்படுத்தியது. இதில் ஊழல் நடந்ததாகவும் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை நடந்ததாகவும் புகார் எழுந்தது. இதையடுத்து, சிபிஐ, அமலாக்கத் துறை ஆகியவை தனித்தனியாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றன. இந்த வழக்கு தொடர்பாக டெல்லி முன்னாள் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, ஆம் ஆத்மி எம்.பி. சஞ்சய் சிங் உட்பட பலர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இந்த வழக்கு விவகாரத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு டெல்லி முதல்வருக்கு கடந்த வியாழக்கிழமை (பிப்.22) 7-வது முறையாக அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியிருந்தது. முன்னதாக, வழக்கு தொடர்பாக கேஜ்ரிவாலுக்கு அமலாக்கத் துறை சார்பில் ஏற்கெனவே 6 முறை சம்மன்கள் அனுப்பப்பட்டன. ஆனால், இந்த சம்மன் சட்டவிரோதமானது எனக் கூறி வரும் கேஜ்ரிவால் இதுவரை விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக அமலாக்கத் துறை சார்பில் டெல்லியில் உள்ள விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. அன்றைய தினம் காணொலி வாயிலாக அவர் நீதிமன்றத்தில் ஆஜரானார். டெல்லி சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றதால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக முடியவில்லை என்று அவர் விளக்கம் அளித்தார். இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், வழக்கின் அடுத்த விசாரணையை மார்ச் 16-ம் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# புரோ ஹாக்கி லீக் – அயர்லாந்தை எளிதில் வீழ்த்தியது இந்தியா



**புவனேஸ்வர் : பிப். 27,**

**9 அணிகள் இடையிலான 5-வது புரோ ஹாக்கி லீக் தொடரின் 2-வது கட்ட போட்டி ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி அயர்லாந்தை எதிர்கொண்டது.**

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே இந்திய அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அபாரமாக ஆடிய இந்திய அணி முதல் பாதி ஆட்டத்தில் அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து அசத்தியது. இதையடுத்து 2-0 என இந்திய அணி முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. தொடர்ந்து 3வது பாதி ஆட்டத்தில் இந்திய அணி மேலும் ஒரு கோல் அடித்து 3-0 என முன்னிலை பெற்றது. 4-வது பாதி ஆட்டத்தில் இந்திய அணி மேலும் ஒரு கோல் அடித்தது. இறுதிவரை அயர்லாந்து அணியால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

இறுதியில் இந்திய அணி 4-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் நீலகண்ட சர்மா, ஆகாஷ்தீப் சிங், குர்ஜந்த் சிங் ஆகியோர் தலா 1 கோல் அடித்தனர்.

# ராஞ்சி டெஸ்டில் இந்தியா அபார வெற்றி – தொடரையும் கைப்பற்றி அசத்தல்




**ராஞ்சி : பிப். 27,**

**ராஞ்சி டெஸ்ட் போட்டியில் ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இந்திய அணி வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது இந்தியா.**

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி கடந்த 23-ம் தேதி ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் தொடங்கியது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 353 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதைத் தொடர்ந்து முதல் இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 2-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் 7 விக்கெட் இழப்புக்கு 219 ரன்கள் எடுத்திருந்தது. இதையடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 3-ம் நாள் ஆட்டத்தை இந்திய வீரர் துருவ் ஜுரெல் 30 ரன்களுடனும், குல்தீப் யாதவ் 17 ரன்களுடனும் தொடங்கினர்.

குல்தீப் யாதவ் 28 ரன்கள் எடுத்த நிலையில், ஜேம்ஸ் ஆண்டர்சன் பந்துவீச்சில் போல்டானார். இதைத் தொடர்ந்து விளையாட வந்த ஆகாஷ் தீப் 9 ரன்கள் சேர்த்த நிலையில், ஷோயிப் பஷிர் பந்துவீச்சில் எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

ஆனால் மறுமுனையில் அபாரமாக விளையாடிய துருவ் ஜுரெல் அரை சதம் கடந்தார். அவர் சதத்தை நெருங்கிய வேளையில் துரதிருஷ்டவசமாக 90 ரன்களில் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை டாம் ஹார்ட்லி வீழ்த்தினார். அவரது ஸ்கோரில் 6 பவுண்டரிகளும், 4 சிக்ஸர்களும் அடங்கும். இதையடுத்து இந்திய அணி 103.2 ஓவர்களில் 307 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இங்கிலாந்து தரப்பில் ஷோயிப் ப்ஷிர் 5 விக்கெட்களையும், டாம் ஹார்ட்லி 3 விக்கெட்களையும், ஜேம்ஸ் ஆண்டர்சன் 2 விக்கெட்களையும் சாய்த்தனர்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 46 ரன்கள் முன்னிலை பெற்றது. பின்னர் 2-வது இன்னிங்ஸை இங்கிலாந்து அணி தொடர்ந்து விளையாடியது. ஆனால் ரவிச்சந்திரன் அஸ்வின், குல்தீப் யாதவ், ஜடேஜாவின் அபார பந்துவீச்சால் இங்கிலாந்து அணி நிலைகுலைந்தது. பென் டக்கெட், ஆலி போப், ஜோ ரூட் ஆகியோரது விக்கெட்களை அஸ்வின் வீழ்த்தி அந்த அணிக்கு அதிர்ச்சியை அளித்தார்.

அந்த அணியில் ஜாக் கிராவ்லி மட்டுமே நிலைத்து நின்று விளையாடினார். அவர் 60 ரன்கள் சேர்த்த நிலையில், குல்தீப் யாதவ் பந்தில் போல்டானார். இதைத் தொடர்ந்து ஜானி பேர்ஸ்டோவின் விக்கெட்டை ஜடேஜா கைப்பற்றினார். பேர்ஸ்டோ 30 ரன்கள் சேர்த்தார்.

பென் ஸ்டோக்ஸ் 4, டாம் ஹார்ட்லி 7, ஆலி ராபின்சன் 0 ரன்கள் எடுத்த நிலையில் குல்தீப் யாதவின் அபார பந்துவீச்சில் வீழ்ந்தனர். கடைசியாக பென் போக்ஸ், ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆகியோரது விக்கெட்களை அஸ்வின் கைப்பற்றினார்.

இதனால் 53.5 ஓவர்களில் 145 ரன்களுக்கு இங்கிலாந்தின் 2-வது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. 2-வது இன்னிங்ஸில் இந்திய அணி தரப்பில் அஸ்வின் 5 விக்கெட்களைக் கைப்பற்றி இங்கிலாந்து அணியின் சரிவுக்குக் காரணமானார். குல்தீப் யாதவ் 4 விக்கெட்களையும், ஜடேஜா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 192 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி 2-வது இன்னிங்ஸை விளையாடியது. 3-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்திய அணி 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 40 ரன்கள் எடுத்தது. ரோஹித் சர்மா 24 ரன்களுடனும், யஷஸ்வி ஜெய்ஸ்வால் 16 ரன்களுடனும் நேற்று நான்காவது நாளை தொடர்ந்தனர். மேலும் பொறுப்பாக விளையாடியது இக்கூட்டணி. 37 ரன்கள் எடுத்திருந்த ஜெய்ஸ்வால் அடித்த பந்தை அசாத்தியமாக கேட்சாக பிடித்து ஆண்டர்சன் அவரை ஆட்டமிழக்க வைத்தார். ரூட் பந்தில் முதல் விக்கெட்டானார் ஜெய்ஸ்வால். மறுபக்கம் ரோஹித் சர்மா நிதானத்துடன் விளையாடி அரைசதம் கடந்தார். எனினும் அவர் ரோஹித் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

ரோஹித் 55 ரன்களில் அவுட் ஆக, ரஜத் படிதார் 0, ஜடேஜா 4 ரன்கள், சர்ஃப்ராஸ் கான் 0 என அடுத்தடுத்து இந்திய அணி விக்கெட்களை இழந்தது. எனினும், ஒன் டவுன் இறங்கிய ஷுப்மன் கில், அறிமுக வீரர் துருவ் ஜுரெல் உடன் இணைந்து இந்திய அணியை வெற்றிப்பாதைக்கு நோக்கி அழைத்து சென்றார். இருவரும் பொறுப்பாக விளையாடி பவுண்டரிகளை விரட்டி வெற்றியைத் தேடித்தந்தனர். 61 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 5 விக்கெட் இழப்புக்கு 192 ரன்கள் எடுத்து வெற்றிபெற்றது. ஷுப்மன் கில் 52 ரன்கள், துருவ் ஜுரெல் 39 ரன்கள் எடுத்து வெற்றிக்கு உதவினர். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஷோயிப் பஷிர் 3 விக்கெட் வீழ்த்தினார். நடப்பு டெஸ்ட் தொடரில் இந்தியா பெறும் மூன்றாவது வெற்றி இதுவாகும். இதன்மூலம் 5 போட்டிகள் டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

# "ரகசியமாக அவனை கிரிக்கெட் ஆட அனுப்புவேன்" ஆகாஷ் தீப் தாயார் உருக்கம்



**ராஞ்சி : பிப். 27,**

**ராஞ்சியில் அறிமுக டெஸ்ட்போட்டியில் ஆடிவரும் ஆகாஷ் தீப்பின் பயணம் கடினமானது. ஆகாஷ் தீப்பின் தாயார் லதுமா தேவி இல்லையெனில் ஆகாஷ் தீப் என்றொரு வேகப்பந்து வீச்சாளர் இன்று இந்திய அணிக்குக் கிடைத்திருக்க மாட்டார்.**

ராஞ்சியில் முதல் நாள் ஃபிளாட் பிட்சில் இங்கிலாந்தின் முதல் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார் ஆகாஷ். பந்துகள் மிகத்துல்லியமாக ஸ்விங் ஆனது. மணிக்கு 138-140 கிமீ வேகம் என்ற போதிய வேகம் கொண்டுள்ளார். அட்டகாசமான லெந்த், பந்தின் தையலை சரியாக நிலை நிறுத்துவது என்று ஆகாஷ் தீப்பின் சாதக அம்சங்கள் பாராட்டப்பட்டு வருகின்றன.

ஆகாஷ்தீப் கிரிக்கெட்டுக்கு வந்ததே பெரிய விஷயம். அவர் ஊரில் கிரிக்கெட் ஆடினால் உருப்படமாமல் போய் விடுவார்கள் என்று கூறுவார்களாம். கிரிக்கெட்டுக்கு அங்கு ஆதரவு கிடையாது. இந்நிலையில் இவரது தாயார் ஆகாஷ் தீப்பிற்கு பெரிய ஆதாரமாக, தூணாக இருந்துள்ளார். தனியார் செய்தி நிறுவனத்திற்கு ஆகாஷ் தீப் தாயார் லதுமா தேவி அளித்த பேட்டியில் ஆகாஷ் தீப்பை கிரிக்கெட்டுக்குள் எப்படி கொண்டு வந்தார் என்பதைப் பேசியுள்ளார்:

"ஆகாஷ் தீப்பின் தந்தை இவனைஒருஅரசுஅதிகாரியாக வேண்டுமென்றுதான் விரும்பினார். ஆனால் ஆகாஷுக்கு கிரிக்கெட் மீதுதான் உண்மையான பற்றுதல். இந்தக் குற்றத்தில் நானும் ஆகாஷ் தீப்பின் கூட்டாளிதான். நான் அவனை ரகசியமாக, ஒருவருக்கும் தெரியாமல் கிரிக்கெட் ஆட அனுப்பி வைத்து அவனது கனவு நிறைவேற வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அப்படித்தான் செய்தேன்.

நாங்கள் இருந்த ஊரில் கிரிக்கெட் பற்றி அனைவரும் சொல்வது இதுதான், 'அவன் உருப்படமாட்டான், எதற்கும் உதவாமால் உதவாக்கரையாகி விடுவான்' என்பதுதான் அந்த ஊரில் கிரிக்கெட் ஆடுபவர்களை சொல்வார்கள். ஆனால் எனக்கு என் மகன் நன்றாக விளையாடுவான் என்ற நம்பிக்கை இருந்தது. அதனால் அவன் கனவை நிறைவேற்றுவதை நோக்கி அவன் செல்ல உதவினோம். 6 மாதகால இடைவெளியில் என் கணவரையும் பெரிய மகனையும் இழந்தாலும் ஆகாஷ் தீப் கிரிக்கெட் கனவு பாழாகிவிடக்கூடாது என்று உளமாற நினைத்தேன்.' என்றார் ஆகாஷ்தீப்பின் தாய்.

மகன் அரசு அதிகாரியாக வேண்டும் என்று தந்தை நினைத்தாலும், வாழ்க்கையில் ஏதாவது ஒரு நல்ல நிலைக்கு ஆகாஷ் வரவேண்டும் என்பதில் அவர் தந்தை தீவிரமாக இருந்திருக்கிறார். ஆனால் இயற்கையின் கோர நாடகம், மகன் இந்தியாவுக்காக ஆடுவதைப் பார்க்க அவர் இல்லை.

எனவேதான் ஆகாஷ் தீப் அறிமுக டெஸ்ட் போட்டியைப்பற்றி உணர்ச்சிவயப்பட்டு கூறும்போது, "இது எனக்கு உணர்வுபூர்வமான தருணம். நான் கிரிக்கெட் ஆடவே வீட்டை விட்டு கிளம்பினேன். பெங்கால் எனக்கு பெரிய அளவில் ஆதரவு கொடுத்தது. எனக்கு மகிழ்ச்சிகரமான சூழ்நிலை அமைந்தது. நான் அவர்களுடன் ரஞ்சி போட்டிகளில் ஆடினேன். என்னுடைய கிரிக்கெட் பயணத்தில் என் குடும்பம் பெரிய அர்ப்பணிப்பைச் செய்துள்ளது " என்று கூறி தந்தைக்கு தன் டெஸ்ட் அறிமுகத் தருணத்தை அர்ப்பணித்தார்.

# சர்வதேச போட்டியில் செயல்படுவதற்கு நடுவர் லிண்டனுக்கு தகுதி இல்லை : வனிந்து ஹசரங்கா குற்றச்சாட்டு




**கொழும்பு : பிப். 27,**

**சர்வதேச கிரிக்கெட் போட்டியில் செயல்படுவதற்கு நடுவர் லிண்டன் ஹன்னிபாலுக்கு தகுதி இல்லை என்று இலங்கை அணி கேப்டன் வனிந்து ஹசரங்கா குற்றம்சாட்டியுள்ளார்.**

இலங்கையில் ஆப்கானிஸ்தான், இலங்கை அணிகளுக்கு இடையிலான சர்வதேச டி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வந்தது. இந்நிலையில் சனிக்கிழமை இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3-வது டி20 போட்டி தம்புல்லா நகரில் நடைபெற்றது. இதில் முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான், 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 209 ரன்கள் எடுத்தது. பின்னர் இலங்கை அணி விளையாடியது. ஆட்டத்தின் கடைசி ஓவரை, ஆப்கானிஸ்தான் வீரர் வபதார் மொமண்ட் பந்து வீசினார். மொமண்ட் வீசிய 4-வது பந்து இடுப்பு உயரத்தைத் தாண்டி வந்தது. ஆனால் அந்தப் பந்துக்கு கள நடுவர் லிண்டன் ஹன்னிபால் நோ-பால் தரவில்லை.

இதையடுத்து களத்துக்கு வந்த கேப்டன் ஹசரங்கா, கள நடுவர் ஹன்னிபாலுடன், வாக்குவாதத்தில் ஈடுபட்டு, தகாத வார்த்தைகளால் பேசினார். இதுதொடர்பாக ஐசிசி போட்டி நடுவரிடம் புகார் செய்யப்பட்டது. ஹசரங்கா செய்தது தவறு எனஐசிசி விசாரணை குழு அறிக்கை அளித்த பிறகு, ஹசரங்காவுக்கு 3 டிமெரிட் புள்ளிகள் வழங்கப்பட்டன. கடந்த 24 மாதங்களில், இதற்குமுன் 2 டிமெரிட் புள்ளிகள் ஹசரங்காவுக்கு வழங்கப்பட்டிருந்தன. 24 மாதத்தில் 4 டிமெரிட் புள்ளிகளை தாண்டிவிட்டதால், ஹசரங்கா ஒரு டெஸ்ட் அல்லது 2 ஒருநாள் அல்லது இரண்டு சர்வதேச டி20 போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐசிசி இதனை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தத் தொடரையடுத்து வங்கதேசத்துக்கு எதிரான அடுத்த டி20 தொடரில் இலங்கை அணி விளையாடவுள்ளது. எனவே, வங்கதேசத்துக்கு எதிரான முதல் இரண்டு டி20 போட்டிகளில் பங்கேற்பதில் இருந்து ஹசரங்கா இடைநீக்கம் செய்யப்படுவார் என்று ஐசிசி அறிவித்துள்ளது. இந்நிலையில் நடுவர் லிண்டன் ஹன்னிபாலுக்கு எதிராக வனிந்து ஹசரங்கா குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது: சர்வதேச போட்டிகளில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன். ஆப்கானிஸ்தான் வீரர் மொமண்ட் வீசிய பந்து இடுப்பு உயரத்துக்கு அருகே வந்திருந்தால் கூட பிரச்சினை இல்லை. ஆனால் இடுப்பு உயரத்துக்கு மேலே அந்த பந்துவந்தது. மேலும், அந்த பந்து இலங்கை வீரரின் தலையிலும் தாக்கியிருக்கும்.

ஆனால் இந்த பந்துக்கு நடுவர், நோ-பால் வழங்கவில்லை. இதைக் கூட கவனிக்க முடியாத நிலையில் அந்த நடுவர் ஹன்னிபால் இருக்கிறார். பந்து எவ்வளவு உயரத்தில் செல்கிறது என்பதை பார்க்க முடியவில்லை என்றால் நீங்கள் (நடுவர்) சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் செயல்பட தகுதி இல்லை. அவர் இந்த வேலையை விட்டு விட்டு வேறு வேலைக்குச் செல்லலாம். இந்த டி20 ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் 3 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# "20 நிமிடம் கூட இருக்க முடியவில்லை" – சாவர்க்கர் இருந்த சிறையில் ரன்தீப் ஹூடா அனுபவம்



**மும்பை : பிப். 27,**

**சாவர்க்கர் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக்கி நடித்துள்ள ரன்தீப் ஹூடா, சாவர்க்கர் அடைக்கப்பட்ட சிறையில் தன்னைத்தானே பூட்டிக்கொண்டு, "இந்த சிறையில் என்னால் 20 நிமிடங்கள் கூட இருக்க முடியவில்லை" என்று அனுபவம் பகிர்ந்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பாரத மாதாவின் தலைசிறந்த மகன்களில் ஒருவரின் நினைவுதினம் இன்று (நேற்று-பிப்.26). தலைவர், பயமறியா சுதந்திரப் போராட்ட வீரர், எழுத்தாளர், தத்துவவாதி மற்றும் தொலைநோக்கு சிந்தனையாளரான வீர் சாவர்க்கர் தான் அவர். உயர்ந்த அறிவாற்றல் மற்றும் தனது தைரியத்தால் அந்த மனிதர் பிரிட்டிஷாரை அச்சுறுத்தியதால், காலாபானி சிறையில் அவரது வாழ்நாளில் இரண்டு முறை 7-க்கு 11 அடி சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரின் வாழ்க்கை வரலாறு படமாக்கப்பட்டுள்ள நிலையில், சிறையில் அவர் என்ன செய்திருப்பார் என்பதை அறிந்துகொள்ள அவர் அடைக்கப்பட்ட சிறையில் என்னை நானே அடைத்துக்கொள்ள முயற்சித்தேன். 11 ஆண்டுகள் அவர் அடைப்பட்டுக் கிடந்த தனிமைச் சிறையில் என்னால் 20 நிமிடங்கள் கூட இருக்க முடியவில்லை.

சிறையில் கொடுமைகளையும், மனிதாபிமானமற்ற சூழலையும் எதிர்கொண்ட வீர் சாவர்க்கரின் இணையற்ற சகிப்புத் தன்மையை கற்பனை செய்து பார்க்கிறேன். அவரது விடாமுயற்சியும், பங்களிப்பும் ஈடு இணையற்றது. எனவே பல தசாப்தங்களாக இந்திய எதிர்ப்பு சக்திகள் அவரை தொடர்ந்து கொச்சைப்படுத்திவருகின்றன" என தெரிவித்துள்ளார்.

சாவர்க்கரின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் படம் 'ஸ்வதந்த்ரிய வீர் சாவர்க்கர்'. ரன்தீப் ஹூடா இயக்கி நடித்துள்ள இப்படத்தின் திரைக்கதையை ரன்தீப் உடன் உட்கார்ஷ் நைதானி என்பவரும் எழுதியுள்ளார். இப்படத்தை ரன்தீப் ஹூடா ஃபிலிம்ஸ், ஆனந்த் பண்டிட் மோஷன் பிக்சர்ஸ், லெஜண்ட் ஸ்டுடியோஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன.

வரலாறு சினிமா

# ரஷ்யா செல்கிறது 'தி கோட்' படக்குழு



**சென்னை : பிப். 27,**

**நடிகர் விஜய். வெங்கட் பிரபு இயக்கத்தில் நடித்து வரும் படம், 'தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்' (தி கோட்).**

ஏ.ஜி.எஸ் நிறுவனம் தயாரிக்கும் இதில் மோகன், ஜெயராம், சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி, பிரபுதேவா, பிரசாந்த், அஜ்மல் உட்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இதன் படப்பிடிப்பு சென்னை, ஹைதராபாத் உட்பட பல்வேறு இடங்களில் நடந்து வந்தது. இதன் இறுதிக்கட்ட படப்பிடிப்பை ரஷ்யாவில் நடத்த படக்குழுத் திட்டமிட்டுள்ளது. இதற்காக விஜய் உட்பட படக்குழுவினர் அங்கு செல்ல இருக்கின்றனர்.

# 'கல்கி 2898 AD' மகாபாரதத்தில் இருந்து தொடங்குகிறது : இயக்குநர் நாக் அஸ்வின் தகவல்



**ஹைதராபாத் : பிப். 27,**

**பிரபாஸ், கமல்ஹாசன் நடிக்கும் 'கல்கி 2898 ஏடி' திரைப்படத்தின் கதை மகாபாரதத்தில் இருந்து தொடங்கி 2898-ல் முடிகிறது என்று அப்படத்தின் இயக்குநர் நாக் அஸ்வின் தெரிவித்துள்ளார்.**

நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடிக்கும் படம், 'கல்கி 2898 ஏடி'. இதில் அமிதாப் பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன், திஷா பதானி உட்பட பலர் நடிக்கின்றனர். சந்தோஷ் நாராயணன் இசை அமைக்கிறார். வைஜெயந்தி மூவிஸ் தயாரித்துள்ள இந்தப் படம், பான் இந்தியா முறையில் ரிலீசாகவுள்ளது. அறிவியல் புனைவு திரைப்படமான இதன் அறிமுக வீடியோ வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய இப்படத்தின் இயக்குநர் நாக் அஸ்வின் கூறும்போது, 'கல்கி 2898 ஏடி' படத்தின் கதை மகாபாரதத்தில் இருந்து தொடங்கி 2898-ல் முடிகிறது. அதுதான் படத்தில் டைட்டில். அதுவே 'கல்கி 2898 ஏடி' எனப்படுகிறது. அதன் பிறகு 6000 ஆண்டுகள் நடக்கும் விஷயங்களை பேசுகிறது. அந்த உலகம் எப்படி இருக்கும் என்பதை கற்பனையாக உருவாக முயன்றுள்ளோம். இதை முடிந்த வரை 'பிளேட் ரன்னர்' பாணியில் இல்லாமல் இந்திய பின்னணியிலேயே உருவாக்கியுள்ளோம்.

# ஜீவா மகள் இயக்குனர் ஆகிறார்



**சென்னை : பிப். 27**

**'12 பி', 'உன்னாலே உன்னாலே', 'தாம் தூம்' ஆகிய படங்களை இயக்கியிருந்த மறைந்த ஒளிப்பதிவாளர் ஜீவா மகள் சனா விரைவில் இயக்குனர் ஆகிறார்.**

'பொன்னியின் செல்வன்' படத்தில் சிறுவயது ஆதித்ய கரிகாலன் கேரக்டரில் நடித்த சந்தோஷ், சிறுவயது நந்தினி வேடத்தில் நடித்திருந்த சாரா அர்ஜுன் இணைந்து நடிக்கின்றனர்.

ஏற்கனவே சாரா அர்ஜுன் குழந்தை நட்சத்திரமாக நிறைய படங்களில் நடித்திருந்த நிலையில், தற்போது அவர் ஹீரோயின் ஆகிறார். சுந்தர்.சி, குஷ்பு இணைந்து தயாரிக்கும் இப்படம் காதல் கதை கொண்டது. விரைவில் படப்பிடிப்பு தொடங்குகிறது. ஜீவா இயக்கிய படங்களுக்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைத்திருந்தார். எனவே, சனா இயக்கும் படத்துக்கும் அவர்தான் இசை அமைப்பார் என்று தெரிகிறது.

# பிறந்தநாளுக்கு ரூ.3 கோடியில் 'கோல்டு கேக்' வெட்டிய ஊர்வசி ரவுதெலா



**மும்பை : பிப். 27,**

**ரூ.3 கோடி மதிப்புள்ள தங்க முலாம் பூசப்பட்ட கேக்கை வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய நடிகை ஊர்வசி ரவுதெலாவை நெட்டிசன்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.**

இந்தியில் பிரபல நடிகையாக இருப்பவர் ஊர்வசி ரவுதெலா, தமிழில் லெஜண்ட் சரவணன் நடித்த 'தி லெஜண்ட்' படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். இதுதவிர தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளிலும் பல்வேறு திரைப்படங்களில் நடித்துள்ளார். ஏராளமான ஆல்பம் பாடல்களிலும் தோன்றியுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்வசி ரவுதெலா தனது 30வது பிறந்தநாளை மும்பையில் கொண்டாடினார். இது தொடர்பான புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் பகிர்ந்திருந்தார். அதில் அவர் பிரபல பாடகர் ஹனி சிங்குடன் தங்கமுலாம் பூசப்பட்ட கேக் ஒன்றை வெட்டியது சமூக வலைதளங்களில் விமர்சனத்தை கிளப்பியுள்ளது. இந்த கேக்கை பாடகர் ஹனிசிங் ஊர்வசிக்கு பரிசளித்துள்ளார்.

24 கேரட் தங்கத்தால் செய்யப்பட்ட அந்த கேக்கின் மதிப்பு சுமார் ரூ.3 கோடி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதனை வைத்து நெட்டிசன்கள் பலரும் ஊர்வசியின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

கடந்த 2014ஆம் ஹனி சிங்குடன் ஊர்வசி ரவுதெலா இணைந்து வெளியிட்ட 'லவ் டோஸ்' ஆல்பம் பாடல் நல்ல வரவேற்பை பெற்றது. இதனையடுத்து தற்போது 'செகண்ட் டோஸ்' என்ற தலைப்பில் மற்றொரு ஆல்பத்தை இருவரும் உருவாக்கி வருகின்றனர். அந்த பாடலின் படப்பிடிப்பு தளத்தில்தான் ஊர்வசி தனது பிறந்தநாளை கொண்டாடியுள்ளார்.

வரலாறு உலகம்

# நேபாளத்தில் 57 லட்சம் குழந்தைகளுக்கு
## ரூபெல்லா, தட்டம்மை தடுப்பூசி போட இலக்கு



**காத்மாண்டு : பிப். 27,**
**நாடு முழுவதும் 48,798 தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டு, 49,937 சுகாதார பணியாளர்கள் மற்றும் 59,906 தன்னார்வலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர்கள்.**

நேபாளத்தில் நாடு முழுவதும் உள்ள 57 லட்சம் குழந்தைகளுக்கு தட்டம்மை மற்றும் ருபெல்லா தடுப்பூசி போடுவது என அந்நாட்டு அரசு முடிவுசெய்து உள்ளது. இதற்காக வருகிற மார்ச் 20-ந் தேதி வரை தேசிய அளவில் தடுப்பூசி முகாம்கள் செயல்படும். இதில், இந்திய எல்லை மற்றும் காத்மாண்டு பள்ளத்தாக்கிற்கு உட்பட்ட 3 மாவட்டங்கள் என அதிகம் தொற்று பாதித்த 21 பகுதிகள் உள்பட 24 மாவட்டங்களில் இந்த தடுப்பூசி முகாம்கள் அமைக்கப்படும்.

இதன்படி, 9 மாத குழந்தைகள் முதல் 15 வயது வரையிலான நபர்களுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதுதவிர, மீதமுள்ள 53 மாவட்டங்களை சேர்ந்த 9 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடப்பட உள்ளது. இது பூஸ்டர் டோசாக போடப்படும். இதற்காக, பள்ளி கூடங்களில் மையம் அமைக்கப்படும். அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் தடுப்பூசி மையங்களிலும் தடுப்பூசிகள் செலுத்தப்படும்.

நாடு முழுவதும் மொத்தம் 48,798 தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டு, 49,937 சுகாதார பணியாளர்கள் மற்றும் 59,906 தன்னார்வலர்கள் இதற்கான பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். கடந்த 2023-ம் ஆண்டு 690 பேருக்கு தட்டம்மை பாதிப்புகள் கண்டறியப்பட்டு, அதில் உயிரிழப்பு ஒன்றும் ஏற்பட்டது. 2004-ம் ஆண்டு அதிக அளவாக 12 ஆயிரம் பாதிப்புகள் கண்டறியப்பட்டன.

# அதிரடி தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல் தரைப்படை
## ரபா நகரில் இருந்து மக்களை வெளியேற்ற திட்டம்



**ஜெருசலேம் : பிப். 27,**
**ஹமாஸ் அமைப்புக்கு எதிராக முழுமையான வெற்றியை பெறுவதற்கு ரபா மீது தரைவழி தாக்குதல் அவசியம் என்று இஸ்ரேல் பிரதமர் கூறியுள்ளார்.**

காசா முனையை ஆட்சி செய்யும் ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்க இஸ்ரேல் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல் படைகள் - ஹமாஸ் இடையே பல ஆண்டுகளாக சண்டை நடந்தாலும், கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேல் பகுதிக்குள் புகுந்து ஹமாஸ் நடத்திய கொடூர தாக்குதலானது, முழு அளவிலான போருக்கு வழிவகுத்தது. ஹமாஸ் நடத்திய அதிரடி தாக்குதலில் 1,200 இஸ்ரேல் மக்கள் உயிரிழந்தனர். 240 பேரை ஹமாஸ் அமைப்பினர் பணய கைதிகளாக பிடித்து, காசா முனைக்கு கொண்டு சென்றனர்.


ஹமாசின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் ராணுவம் காசா முனை மீது முதலில் வான் தாக்குதல் நடத்தியது. பின்னர் தரைப்படையினர் காசா முனைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்துகின்றனர். இந்த தாக்குதலில் ஹமாஸ் அமைப்பினர், பாலஸ்தீன மக்கள் என 29 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 69 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் காயமடைந்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இஸ்ரேல் தரைப்படையினர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி தாக்குதல் நடத்தி, அப்பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். சண்டை நடந்த பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட பொதுமக்கள், புகலிடம் தேடி தெற்கு நோக்கி சென்றனர். தற்போது தெற்கு முனையில் எகிப்து எல்லையை ஒட்டியுள்ள ரபா நகரில் ஏராளமான மக்கள் முடங்கி உள்ளனர்.

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக முழுமையான வெற்றி கிடைக்கும் வரை போர் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சபதம் எடுத்துள்ளார். முழுமையான வெற்றியை பெறுவதற்கு ரபா மீது தரைவழி தாக்குதல் அவசியம் என்றும் கூறியுள்ளார். இதையடுத்து, ரபா நகரை நோக்கி இஸ்ரேல் ராணுவத்தின் தரைப்படை முன்னேற திட்டமிட்டுள்ளது. இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக, அங்கிருந்து மக்களை வெளியேற்றுவதற்கான திட்டத்தை இஸ்ரேல் ராணுவம் முன்மொழிந்துள்ளது.

காசா பகுதியில் போர் நடக்கும் பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றும் திட்டம் மற்றும் அடுத்தகட்ட ராணுவ செயல்பாட்டு திட்டத்தை ராணுவம் தாக்கல் செய்திருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால், பொதுமக்கள் எப்படி, எந்த பகுதிக்கு மாற்றப்படுவார்கள்? என்பது குறித்த எந்த விவரமும் அந்த அறிக்கையில் இல்லை.

இஸ்ரேல் படைகள் இதுவரை கால்பதிக்காத ரபா நகரில் இப்போது சுமார் 14 லட்சம் பாலஸ்தீனர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள், வேறு இடங்களில் இருந்து வந்தவர்கள். இந்த நகரை இஸ்ரேல் தரைப்படை சுற்றி வளைத்து தாக்கினால் ஏராளமான மக்கள் கொல்லப்படுவார்கள் என, வெளிநாடுகள் மற்றும் மனிதநேய உதவி அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

# அமெரிக்காவில் இந்திய வம்சாவளியை சேர்ந்த பொறியாளருக்கு உயரிய விருது



**டெக்சாஸ் : பிப். 27,**
**அமெரிக்காவில் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டு தோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.**

இந்த ஆண்டுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் டெக்சாசின் மிக உயரிய கல்வி விருதான எடித் மற்றும் பீட்டர் ஓடோனல் விருது இந்திய வம்சாவளியை சேர்ந்த கணினி பொறியாளர் மற்றும் பேராசிரியரான அசோக் வீரராகவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொறியியல் துறையில் சாதனை படைத்ததற்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

# தலிபான்களால் கைது செய்யப்பட்ட ஆஸ்திரிய முதியவர் ஓராண்டுக்கு பின் விடுதலை




**காபுல் : பிப். 27,**
**தலீபான்களால் கைது செய்யப்பட்ட ஆஸ்திரிய முதியவர் ஓராண்டுக்கு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தலீபான்கள் ஆட்சியை கைப்பற்றினர். இதனால், அதிபர் அஷ்ரப் கானி நாட்டில் இருந்து தப்பியோடினார். தலீபான்கள் ஆட்சியை கைப்பற்றியபின் அந்நாட்டில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பல வெளிநாட்டு தூதரகங்கள் மூடப்பட்டன.

அதேபோல், பெண்கள் பொது இடங்களுக்கு செல்லவும் தலீபான்கள் தடைவிதித்தனர். பெண்கள் 6ம் வகுப்புக்கு மேல் படிக்கவும் தடை விதிக்கப்பட்டது. இதனிடையே, ஆப்கானிஸ்தானுக்கு சுற்றுலா சென்ற ஆஸ்திரியா நாட்டை சேர்ந்த 84 வயதான ஹெர்பெட் பிரிட்ஸ் என்ற முதியவரை தலீபான்கள் கைது செய்தனர். அவர் ஓராண்டுக்கு மேல் ஆப்கானிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டார். அவரை விடுதலை செய்ய ஆஸ்திரிய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வந்தது.

இந்நிலையில், ஓராண்டுக்கு மேல் ஆப்கானிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஹெர்பெட் பிரிட்சை தலீபான்கள் தற்போது விடுதலை செய்தனர். ஹெர்பெட் பிரிட்ஸ் கத்தார் தலைநகர் தோஹாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து அவர் ஆஸ்திரியா செல்ல உள்ளார்.

# ரஷியாவுடனான போரில் 31 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் உயிரிழப்பு : ஜெலன்ஸ்கி



**கீவ் : பிப். 27,**
**உக்ரைனுக்கான ராணுவ உதவிக்கு அமெரிக்கா நிச்சயமாக ஒப்புதல் அளிக்கும் என ஜெலன்ஸ்கி கூறினார்.**

உக்ரைன் மீது ரஷியா முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கி இரண்டு ஆண்டு நிறைவடைந்துள்ளது. மூன்றாம் ஆண்டாக போர் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், போர்க்களத்தில் வெற்றிக்காக உக்ரைன் வீரர்கள் போராடி வருகின்றனர். இந்த நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது; உக்ரைனின் வெற்றிமேற்கத்தியநாடுகளின் ஆதரவை சார்ந்துள்ளது. உக்ரைனுக்கான ராணுவ உதவிக்கு அமெரிக்கா நிச்சயமாக ஒப்புதல் அளிக்கும்.

ரஷியாவுடனான இரண்டு வருட போரில் 31 ஆயிரம் உக்ரேனிய வீரர்கள் வீர மரணமடைந்துள்ளனர். ஆனால் ரஷிய அதிபர் புதினோ, ஒன்றரை முதல் 3 லட்சம் உக்ரேனிய வீரர்கள் உயிரிழந்ததாக பொய் சொல்லி வருகிறார். எங்கள் வீரர்களின் இழப்புகள் ஒவ்வொன்றும் எங்களுக்கு ஒரு பெரிய இழப்பு." என்று கூறினார்.

ரஷிய அதிபர் புதினுடன் பேசுவீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "உங்களால் காது கேளாத நபருடன் பேச முடியுமா? எதிரிகளைக் கொல்லும் ஒரு மனிதனுடன் பேச முடியுமா? அவர் 2030ம் ஆண்டு வரை அதிகாரத்தில் இருக்க நினைக்கிறார். ஆனால் நாங்கள் விரைவில் வீழ்த்த விரும்புகிறோம்." என்றார்.

# ஹமாஸ் அமைப்பின் பிடியில் இருந்த
## இஸ்ரேல் ராணுவ வீரர் படுகொலை



**டெல் அவிவ் : பிப். 27,**
**இஸ்ரேல் ராணுவத்தின் கவச படையை சேர்ந்த டேனியல், காசாவில் வைத்து கொல்லப்பட்டு விட்டார் என இஸ்ரேல் உறுதிப்படுத்தி உள்ளது.**

இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு நடத்திய கொடூர தாக்குதலில், 1,200 இஸ்ரேல் மக்கள் உயிரிழந்தனர். 240 பேர் பணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர். அவர்களின் பிடியில் உள்ள 134 பேரில் 31 பேர் உயிரிழந்து விட்டனர் என்று இஸ்ரேல் சமீபத்தில் அறிவித்தது.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால், பாலஸ்தீனர்களின் மொத்த உயிரிழப்பு 29,092 ஆக உள்ளது என்று காசா சுகாதார அமைச்சகமும் தெரிவித்து இருந்தது. உயிரிழந்தவர்களில் 3-ல் 2 பங்கு மக்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். 69 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் காயமடைந்து உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக ஒட்டுமொத்த வெற்றி கிடைக்கும் வரை போரானது தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சபதம் எடுத்துள்ளார். இதனால், எகிப்திய எல்லையையொட்டிய தெற்கு பகுதியில் அமைந்த ரபா நகரை நோக்கி இஸ்ரேல் ராணுவம் செல்ல திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினரால், காசாவுக்கு சிறை பிடித்து செல்லப்பட்டவர்களில் இளம் ராணுவ வீரரான ஓஜ் டேனியல் (வயது 19) என்பவரும் ஒருவர் ஆவார். பீரங்கி படையில் பணியாற்றிய இவரை, சக பணியாளர்களுடன் சேர்த்து பயங்கரவாதிகள் பிடித்து சென்றனர்.

இந்த சூழலில், இஸ்ரேல் ராணுவத்தின் 7-வது கவச படையின் 77-வது பட்டாலியனை சேர்ந்தவரான டேனியல், காசாவில் வைத்து கொல்லப்பட்டு விட்டார் என ரகசிய தகவல் அடிப்படையில் இஸ்ரேல் உறுதிப்படுத்தி உள்ளது. டேனியலுக்கு பெற்றோர் மற்றும் இரட்டை சகோதரிகள் உள்ளனர். அவருடைய உடல் காசாவிலேயே உள்ளது. எனினும், ராணுவத்தின் ரபி கூறியதன்பேரில் அவருக்கு குவார் சபா ராணுவ மயானத்தில் வைத்து இறுதி சடங்குகள் நடைபெறும். ஒரு வார காலம் நடைபெற கூடிய இந்த இரங்கலில் டேனியலின் குடும்பத்தினரும் கலந்து கொள்கின்றனர்.

# பாலஸ்தீன பிரதமர் ராஜினாமா



**காசா : பிப். 27,**
**காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தொடர் தாக்குதல் எதிரொலியாக ராஜினாமா முடிவை எடுத்திருப்பதாக முகமது ஷ்டய்யே கூறியுள்ளார்.**

பாலஸ்தீனர்கள் வசிக்கும் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் படைக்கு எதிராக இஸ்ரேல் ராணுவம், தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்நிலையில், பாலஸ்தீன நிர்வாகத்தில் புதிய திருப்பமாக, பாலஸ்தீன பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக முகமது ஷ்டய்யே அறிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தில் தனது தலைமையிலான அரசை கலைத்துவிட்டு புதிய அரசு பொறுப்பேற்க பிரதமர் முகமது ஷ்டய்யே விருப்பம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, பாலஸ்தீன அதிபர் மகமூத் அப்பாஸிடம் தனது ராஜினாமா கடிதத்தை அவர் சமர்ப்பித்துள்ளார்.

காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தொடர் தாக்குதல் எதிரொலியாக இந்த முடிவை எடுத்திருப்பதாகவும், காசாவில் போர் முடிவுற்றபின், அதற்குப் பிந்தைய சூழலில் பாலஸ்தீனியத்தை நிர்வகிக்க புதிய அரசு அமைவதே சிறந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் முன்பு விமானப்படை வீரர் தீக்குளிப்பு




**வாஷிங்டன் : பிப். 27,**
**பாலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் படையினர் கடந்த3மாதங்களுக்குமேலாக கடுமையான தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இந்த சண்டை நடந்து வருகிறது. இதில் அப்பாவி பொதுமக்கள், குழந்தைகள் என 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகி விட்டனர்.**

காசாவில் நடந்து வரும் போரை நிறுத்துமாறு உலக நாடுகள் கோரிக்கை விடுத்து வந்த போதிலும் அதனை இஸ்ரேல் நிராகரித்து வருகிறது. தொடர்ந்து காசாவில் குண்டுகளை வீசி வருகிறது. பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வருகிறது. இந்த நிலையில் இப்பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவில் விமான படையைசேர்ந்த வீரர் ஒருவர் தீக்குளித்த சம்பவம் பரபரப்பைஏற்படுத்திஉள்ளது.

வாஷிங்டனில் இஸ்ரேல் தூதரக அலுவலகம் உள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விமான படை வீரர் உடை அணிந்த ஒருவர் இந்த அலுவலகத்துக்கு வந்தார். திடீரென அவர் உடல் முழுவதும் பெட்ரோலை ஊற்றிதீவைத்துக்கொண்டார். தீ மளமளவென அவரது உடல் முழுவதும் பரவியது. இதனால் அவர் அலறி துடித்தார். இதைபார்த்த அங்கிருந்தவர்கள் அவர் மீது பற்றிய தீயை அணைத்து அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

அவர் எதற்காக இந்த முடிவை மேற்கொண்டார் என தெரியவில்லை. இது தொடர்பான வீடியோ வெளியாகி உள்ளது. அந்த வீடியோவில் அவர் தீக்குளிப்பதற்கு முன்பு பேசியது இடம் பெற்றுள்ளது. அவர் இனிமேலும் நான் இனப்படு கொலைக்கு (காசாவில்) உடந்தையாக இருக்க மாட்டேன். நான் ஒரு தீவிர எதிர்ப்பு செயலில் ஈடுபட உள்ளேன் என கூறி உள்ளதாக தெரிகிறது. இந்த தீக்குளிப்பு சம்பவத்தை தொடர்ந்து இஸ்ரேல் தூதரகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. இது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதவழிபாட்டின்போது துப்பாக்கி சூடு – 15 பேர் பலி



**ஒவ்கடங்கு : பிப். 27,**
**மதவழிபாடு செய்ய கூடியிருந்தபோது நடந்த துப்பாக்கி சூட்டில் 15 பேர் உயிரிழந்தனர்.**

மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்று பர்கினோ பசோ. நைஜீரியா, மாலி போன்ற நாடுகளை எல்லைகளாக கொண்டுள்ள இந்நாட்டில் கடந்த செப்டம்பர் மாதம் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. அதேவேளை அந்நாட்டில் அல்கொய்தா, ஐ.எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

பயங்கரவாத குழுக்கள் பொதுமக்கள், பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால், இந்த பயங்கரவாத குழுக்களை ஒழிக்க அந்நாட்டு பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். பயங்கரவாதிகளுக்கு எதிராக பாதுகாப்பு படையினருக்கு உதவியாக அரசு ஆதரவு குழுக்களும் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், அந்நாட்டின் ஷகீல் மாகாணம் எசஹ்னி என்ற பகுதியில் உள்ள கிறிஸ்தவ மதவழிபாட்டுதலத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதவழிபாடு நடைபெற்றது. இதில் பலர் மதவழிபாடு செய்துகொண்டிருந்தபோது திடீரென வழிபாட்டு தலத்திற்குள் நுழைந்த கும்பல் அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தியது. இந்த துப்பாக்கிசூட்டில் மதவழிபாடு செய்துகொண்டிருந்த 15 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாட்டில் மூடிகளை தலையால் திறந்து கின்னஸ் உலக சாதனை



**ராவல்பிண்டி : பிப். 27,**
**இன்ஸ்டாகிராமில் சமீபத்தில் இந்த வீடியோ பகிரப்பட்ட உடன் 17 லட்சம் பேர் அதனை பார்வையிட்டு உள்ளனர்.**

உலகம் முழுவதும் அரிய சாதனைகளை படைத்தவர்கள், கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெறுகின்றனர். இந்நிலையில், பாகிஸ்தானை சேர்ந்த, முகமதுரஷீத் என்பவர் புதிய உலக சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

இதன்படி, மேஜை ஒன்றின் முனை பகுதியில் பாட்டில்களை இறுக பிடித்து கொண்டுதிறமையாக, அதன் மூடிகளை அவருடைய தலையால் விரைவாக முட்டி, நீக்குகிறார். பாட்டில்களை ஒன்றன் பின் ஒன்றாக அவருடைய உதவியாளர்கள் அனுப்பி கொண்டே இருக்கின்றனர். அதிவேகத்தில் இந்த பாட்டிலின் மூடிகளை நீக்கும் செயலை தலையால் செய்து ரஷீத் சாதனை படைத்திருக்கிறார். அவர் மொத்தம் 77 பாட்டில் மூடிகளை ஒரு நிமிடத்தில் நீக்கியுள்ளார். கடந்த 2023-ம் ஆண்டு பிப்ரவரியில் இந்த சாதனையை அவர் படைத்திருக்கிறார்.

எனினும், இந்த வீடியோ இன்ஸ்டாகிராமில் சமீபத்தில் பகிரப்பட்ட உடன் 17 லட்சம் பேர் அதனை பார்வையிட்டு உள்ளனர். பலரும் விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றனர். கடந்த 2020-ம் ஆண்டு இந்திய தற்காப்பு கலை நிபுணரான பிரபாகர் ரெட்டி என்பவர், ஒரு நிமிடத்தில் 68 பாட்டில் மூடிகளை நீக்கியதே அப்போது சாதனையாக இருந்தது.

# 1984ல் உதவிய உக்ரைனுக்கு கைமாறு செய்யும் வெல்ஷ் தொழிலாளர்கள்



**பிரிட்டன் : பிப். 27,**
**கடந்த 2022 பிப்ரவரி 24 அன்று தொடங்கிய ரஷிய -உக்ரைன் போர், 2 ஆண்டுகளை கடந்து தீவிரமாக நடைபெற்று வருவதால், உக்ரைனில் அத்தியாவசிய தேவைகள் இல்லாமல் மக்கள் பரிதவிக்கின்றனர்.**

நூற்றுக்கணக்கான உக்ரைன் சுரங்க தொழிலாளர்களும் ரஷியாவிற்கு எதிராக போரில் களம் இறங்கி உள்ளனர். 1984ல் ஐரோப்பாவின் வேல்ஸ் பகுதியில் நிலக்கரி சுரங்க தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு உக்ரைன், ஜெர்மனி, இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து சுரங்க தொழிலாளர்களும் ஆதரவளித்தனர்.

நீண்ட நாள் நடைபெற்ற இந்த வேலை நிறுத்தத்தினால் வருவாய் இல்லாமல் தவித்த அந்த தொழிலாளர்களுக்கு உலகெங்கும் இருந்து பொருட்கள் மற்றும் நிதியுதவி வழங்கப்பட்டது. அப்போது சோவியத் யூனியன் என அழைக்கப்பட்ட ஒருங்கிணைந்த ரஷியாவில், உக்ரைன் பகுதியில் இருந்த சுரங்க தொழிலாளர்களில் ஏராளமானவர்கள், வெல்ஷ் சுரங்க தொழிலாளர்களுக்கு பலவித உதவிப்பொருட்களை அனுப்பி வைத்தனர்.

சுமார் 40 வருடங்கள் கடந்த பிறகும், தங்களுக்கு உக்ரைனியர்கள் செய்த உதவியை மறக்காத வெல்ஷ் பணியாளர்கள், தங்களின் ஊதியத்தை நன்கொடையாக வழங்கி, பல சரக்கு வாகனங்களில் மருந்து, மளிகை உள்ளிட்ட பல அத்தியாவசிய பொருட்களை தெற்கு வேல்ஸ் பகுதியில் இருந்து உக்ரைன் தலைநகர் கீவ் நகருக்கு, சாலை வழியே கொண்டு சென்று வழங்கினர்.

இது குறித்து உக்ரைன் சுரங்க தொழிலாளர்கள், "சுரங்க தொழிலாளர்கள் அனைவரும் ஒரே இனம் என்பதை 1984ல் நாங்கள் மறக்கவில்லை. அதே போல் அவர்களும் எங்களை இப்போது மறக்கவில்லை. குண்டு வீச்சில் தாக்கப்படும் அபாயம் உள்ளதை அறிந்தும் அவர்கள் துணிந்து வந்து எங்களுக்கு உதவினர்" என பெருமிதத்துடன் கூறுகின்றனர்.

# கீழடி முதல் 2 கட்ட அகழாய்வு அறிக்கையை வெளியிட மத்திய அரசுக்கு உத்தரவு





# பாலாற்றில் தடுப்பணை கட்ட ரூ.215 கோடி நிதி ஒதுக்கீடு : ஆந்திர முதல்வர் அறிவிப்பு

# அடுத்த 100 நாட்கள் எங்களை வழிநடத்துபவராக ஜி.கே.வாசன் இருப்பார்




| சென்னை / புதுக்கோட்டை | 27.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

27.02.2024 செவ்வாய்



# வரலாற்றில் இன்று

## இன்றைய பிறந்த நாள்

பி. எஸ். எடியூரப்பா , இந்திய அரசியல்வாதி (பி.1943)



புருனோ சோரெசு , பிரேசிலிய டென்னிசு வீரர் (பி.1982)



சந்தீப் சிங் , இந்திய வளைதடிப் பந்தாட்ட வீரர் (பி.1986)



## இன்றைய நினைவு நாள்

சந்திரசேகர ஆசாத் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1906) (இ.1931)



வேலூர் ஜி. ராமபத்ரன் , தமிழக மிருதங்கக் கலைஞர் (பி.1929) (இ.2012)



நானாஜி தேஷ்முக் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1916) (இ.2010)



பன்னாட்டு அரசு சார்பற்ற அமைப்புகளின் நாள்